
# ஆரோக்யதீபிகை

ஆரோக்கிய மார்க்கங்களைப் போதிக்கும் பத்திரிகை

475

17 OCT 19




உனது ஆரோக்கிய நக்ஷத்திரத்தை ஜொலிக்கும்படி செய்.

1. சுகம், 2. மெதுவாய் உண், 3. நல்ல சாப்பாடு, 4. சுத்தமான நீரை நிரம்பக்குடித்தல், 5. சூரிய வெளிச்சம், 6. நல்ல காற்று, 7. வெளிக்காற்றில் வியாயாமம், 8. சுத்தமான சர்மம், 9. சுத்தமான பற்கள், 10. காற்றோட்டமுள்ள அறைகள், 11. வெப்பமான தளர்ந்த உடை.

# ஆரோக்கிய தீபிகை,—சில பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

**சுதேசமித்திரன், சென்னை—17-1-31:**—டாக்டர்கள் யு. ராமராவும் யு. கிருஷ்ணராவும் ஆசிரியர்களாக இருந்து நடத்தி வரும் இப்பத்திரிகை ஆரம்பித்து எட்டு வருஷங்களாகி ஒம்பதாம் வருஷம் தொடங்குகிறது. திருக்கழுக்குன்றத்தின் மலையையும் கோயிலையும் முன்படமாக அணிந்திருக்கும் இவ்வருஷ முதல் இதழானது மலை தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு செல்வோரின் சுகாதாரமானது எவ்வாறு மேம்பாடடைகிறதென்று இக்காலத்திய சாஸ்திர அறிவோடு இணைத்து விளக்குகிறது. பல்வலியைப்பற்றியும் மரக்கறி உணவைப் பற்றியும், பள்ளிமாணவர்களின் திருஷ்டிக்குறைவைப்பற்றியும் இன்னும் பல நித்யப்படி உபயோகமான பல விஷயங்களைப்பற்றியும் பல மேதாவிகள் வியாசம் எழுதியிருக்கிறார்கள். வியாதி, சுகாதாரம் போன்ற விஷயங்களைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதும்போதும் ஆசிரியர்கள் தெளிவாயும் சுலபமான பாஷையிலும் எழுதிவருவது மிகவும் மெச்சத்தக்கது. வருஷச்சந்தா ரூபாய் 1-8-0 யாகயிருந்து வரும் இப்பத்திரிகை தமிழ், தெலுங்கு, கன்னட பாஷைகளிலும் வெளியிடப்படுகிறது. சென்னை, தம்புசெட்டி தெருவில் 323, நெம்பரில் ஆசிரியர்களுக்கு எழுதி இதன் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தெய்வபக்தன் 19-1-31 :**—வைத்திய நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளை 'ஆரோக்கிய தீபிகை' யானது உங்கள் வீடுகளில் நுழையச் செய்கின்றது. பிரதி மாதமும் இதில் ஆரோக்கியத்திற்கு முக்கியமான விஷயங்கள் அதாவது உணவு போஷிப்பு, நோய்களைத் தடுக்கும் மார்க்கம், சிசுக்கள் பராமரிப்பு அவைகளின் ஆகாரம் குழந்தைகளைப் பழக்குதல் நோயாளிக்குச் செய்யவேண்டிய சிசுருஷை கர்ப்பிணி நடந்துகொள்ள வேண்டிய முறைகள் முதலியவற்றை இதில் காணலாம். எந்தப்பாஷையிலும் இதன் வருட சந்தா ரூ. 1-8-0. மானேஜர், "**ஆரோக்கிய தீபிகை**" தபாற்பெட்டி 166, சென்னை.

**ஊழியன், 3-2-31.**—இது ஓர் மிக நேர்த்தியான மாதப் பத்திரிகை. இதன் ஆசிரியர் டாக்டர் யூ. ராமராவ், யூ. கிருஷ்ண ராவ் (எம். பி. பி. எஸ்.) ஆகிய இருவருமாவர். இதன் ஜனவரி இதழில் சகல ஜனங்களும் உடல் நல சம்பந்தமாக உணர்ந்து கொள்ளவேண்டிய பற்பல அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகையின் அமைப்புச் சிறந்ததாகும். "ஆரோக்கிய தீபிகைப் பிரசுரக்காரர், ௩௨௩, தம்புச் செட்டித் தெரு, சென்னை" என்ற விலாசத்திற்கு எழுதி இப்பத்திரிகை பெறலாம். இதன் வருடச் சந்தா உள் நாட்டுக்கு ரூ. க—அ—0 ம் வெளி நாட்டுக்கு ரூ. உ—0—0 ம் தனிப் பிரதி விலை அணா உ ம் ஆகும்.

**ஜனமித்திரன், 6-2-31 :**—'ஆரோக்கிய தீபிகை' யெனும் அரிய மாதப் பத்திரிகையின் தொகுதி 8. பகுதி 1 வரப் பெற்றோம். இதன் ஆசிரியர்கள் டாக்டர் யூ. ராமராவ், யூ. கிருஷ்ண ராவ் (எம். பி. பி. எஸ்.) ஆகிய இருவருமாவர். இப்பத்திரிகை தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம் முதலிய நான்கு பாஷைகளிலும் பிரசுரிக்கப்படுவதிலிருந்து, "ஆரோக்கிய தீபிகைப் பிரசுரக்காரர், 323, தம்புச் செட்டிதெரு, சென்னை." என்ற விலாசத்திற்கு எழுதி இப்பத்திரிகை பெறலாம். இதன் வருடச் சந்தா உள் நாட்டுக்கு ரூ. 1-8-0ம் வெளி நாட்டுக்கு ரூ. 2ம் தனிப் பிரதி விலை அணா 2ம் ஆகும்.

**தேசாபிமானி, கூடலூர், 7-2-31 :**—ஆசிரியர்களாகிய ஸ்ரீமான்கள் டாக்டர் யூ. ராமராவ் யூ. கிருஷ்ண ராவ், எம். பி. பி. எஸ். நடத்திவரும் ஆரோக்கிய மார்க்கங்களைப் போதிக்கும் ஆரோக்கிய தீபிகை என்னும் மாதாந்தரப் பத்திரிகையின் 1931வது ஜனவரி மாதத்து சஞ்சிகை கிடைக்கப் பெற்றோம். இப்பத்திரிகை ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கு பாஷையிலும் தனித் தனியே பிரசுரிக்கப்படுகின்றது. இதன் சந்தா வருஷமொன்றுக்கு ரூ. 2.

**லோகோபகாரி :**—சென்னையில் பேர் பெற்று விளங்கும் ஆங்கில (முறை) வைத்தியரான டாக்டர் ராமராவை ஆசிரியராகக் கொண்ட ஆரோக்கிய தீபிகையின் எட்டாவதாண்டு முதல் இலக்கம் வரப் பெற்றோம். இதில் மக்கள் உடல் நலத்திற்குரிய பல அரிய கட்டுரைகள் வெளியாயிருக்கின்றன. முன்னோர்கள் விதித்த பழைய ஆசார முறைகள் இதில் புதிய முறையில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பத்திரிகை தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டுமென்பது நமது கருத்து. டாக்டர் ராமராவ் ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கிலும், கன்னடத்திலும் சுகாதாரத்தைப் போதிக்கும் நாலு மாதப் பத்திரிகைகளை நடத்தி வருகிறார். அதன் வாயிலாக அவர் அரிய தோர் தேசத் தொண்டு செய்து வருகிறார் என்று சொல்ல வேண்டும். நல்ல காகிதத்தில் அழகிய படங்களுடன் வெளியாகும் இச்சஞ்சிகையின் வருஷ சந்தா ரூ. 1-8-0 தான். பத்திராதிபர்: "ஆரோக்கிய தீபிகை" சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| வம்சவிருத்தியை அடக்குமுறை | ... | 113 |
| பிறவாத சிசு—பிறந்த சிசு இவற்றின் பிரசனை ஒரு பெருத்த தேசியப் பிரசனை. டாக்டர் மெஸ்ஸர்ஸ் ஆனுதாமஸ், கராச்சி | ... | 116 |
| காச நோயினுல் நேரிடும் பெருத்த அபாயம் காப்டன் ஷயம்லால், பீ.ஏ. எம். பி. ஸிவில் சர்ஜன், பாலியா | ... | 121 |
| டைபாய்டு என்னும் விஷ ஜுரம் டாக்டர் டிபேன்திர நாத் பானர்ஜி, பீ.ஏ. எல்.எம்.எப். பண்டிஹால் கிராமம், ஹௌரா ஜில்லா வங்காளம் | ... | 124 |
| மதுபானம், ஆனந்தஸ்வாமி பட்நகர், கைரானு, முஜபர்நகர் | ... | 126 |
| வீட்டை விட்டு வெளியே செய்ய வேண்டிய முதல் உதவி. ஒரு தேர்ச்சி பெற்ற தாதி எழுதியது | ... | 128 |
| ஆரோக்கிய வர்த்தமானங்களும் குறிப்புகளும் | ... | 130 |



குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் அற்புதமான சிகிச்சை. வெட்டை ரோகத்திற்கு எடுத்தது. வெட்டை ரோகக் கிருமிகளைக் கோல்லக்கூடியது கோனோ கில்லர் (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது).

இதுதான் இப்பொழுது ஏற்ற ஔஷதம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியங்கள் உங்களைக் குணப்படுத்தவிரா விடில், வாக்ஸைன்களும் இஞ்செக்ஷனும் பலன் தந்திராவிடில், கடைசியாகவேனும் நமது கோனோ—கில்லர் என்னும் ஔஷதத்தைப் பரீக்ஷித்துப் பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு நாளாகியிருந்தாலும் அது குணப்படுத்திவிடும். ஸ்திரீகள் புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை நோய்களுக்கும், மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும், மூத்திரம் பெய்கையில் ஏற்படும் வலியை நிவர்த்திசெய்யவும், மூத்திரப்பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும் வெட்டை வியாதிக் கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளைப் போக்கவும் இது எடுத்தது. அந்நிய நாடுகளுக்கு :—50 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு 7 ஷி ; 2 புட்டிகளுக்கு 12 ஷி ; 3 புட்டிகளுக்கு 16 ஷி ; 4 புட்டிகளுக்கு 20 ஷி ; தபாற் கட்டணம் உள்பட முன் பணம் அனுப்புங்கள். 50 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூ. 3 வி.பி. சார்ஜு வேறு. வெளிநாட்டு நேயர்கள் ரூ. 4 8 0 அனுப்பவேண்டும். கடிதங்கள் இங்கிலீஷில் எழுதவும்.

டாக்டர் டி. என். ஜஸானி, 137, கிகா தெரு, (குலால்வாடி), பம்பாய் 4.
Dr. D. N. Jasani, 137 Kika Street, (Gulalvadi) Bombay 4.
தந்தி விலாசம் :—கோனோ கில்லர். Tel:—"GONO KILLER".

ஏஜண்டுகள் : தாதா அண்டு கம்பெனி,
52, லிங்கியப்ப நாய்க்கன் தெருவு, சென்னை.

# வாழ்க்கையில் வெற்றி இதோ!

உலக வாழ்க்கை விநோதங்கள், அரிய விஷயங்கள், விசித்திரங்கள் எல்லாவற்றின் உண்மையான இரகசியங்களையும் இப்புத்தகத்தைப் படித்தறிந்து கொண்டால் உங்கள் வாழ்க்கையில் வெற்றிபெறுவீர்கள். அதிசயம் நிரம்பியுள்ள அற்புதப் புத்தகம் 280 பக்கங்கள். சித்திர சகிதம். ரூபாய் 3. இன்றே வாங்குக.

## ஜீவ வசிய பரம ரகஸ்யம்

மனோஹரம் கம்பெனி
தபாற்பெட்டி 248 சென்னை.

# கலியாணமா?

கண்ணை மூடிக்கொண்டு விழுந்து பின் துக்கிக்க வேண்டாம். முன்னதாகவே கலியாண வாழ்வின் இரகசியத்தையும் விஷயத்தையும் கற்றுக் கொண்டு சுகமாய் வாழ்க

## மணவாழ்க்கையின் மர்மங்கள்

என்னும் முதல் தமிழ் நூலில் வேண்டிய நல்லறிவும் புத்திமதியும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது

பிரதி ரூ. 2-4.

மனோஹரம் கம்பேனி
தபாற்பெட்டி 248. சென்னை



128576.
சென்னை-600 008



## விஸ்வகர்ம குலநல மேன்பாட்டிற்கு உழைக்கும் ஓர் சிறந்த தமிழ் மாத வெளியீடு.

வருட சந்தா ரூபாய் ஒன்றே.

தற்கால முறைக்கேற்ப வியாபாரம், கைத்தொழில், கல்வி அபிவிர்த்திக்கு வேண்டிய சிறந்த கட்டுரைகளும், நிறைந்த விஷயங்களும், குறைந்த சந்தாவும் கொண்ட பத்திரிகை இது ஒன்றே, அன்பர்களும் குலாபிமானிகளும் இன்றே சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து ஆதரிக்க முன்வாருங்கள்.

எல்லா இடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை. பிரிய முள்ளவர்கள் மானேஜருக்கு எழுதவும்.

வருட சந்தா ரூ. 1—0—0
வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0

விலாசம்:—
மானேஜர்,
"விஸ்வ தேசன்" காரியாலயம்,
கோயமுத்தூர்.





# சுவாசமே உயிர்

இது வெறும் சுவாச முறைக்குறிய பிராணாயாம, அல்லது தேகப் பயிற்சிக்குறிய சாதாரண நூலன்று. இதில் பிராணாயாமத்துடன் கூடிய தேகாப்பியாசம் செய்தற்குரிய முறைகளைத்தும் மேல் நாட்டுக் கீழ்நாட்டு முறைகளின்படி மிகநன்றாக விளக்கப்பட்டுள்ளன. இதில், 1 சுவாசமே உயிர், 2 சுவாசத்தின் பகிரங்க சித்தாந்தம், 3 சுவாசத்தின் அந்தரங்க சித்தாந்தம், 4 நரம்புக் கருவிகள், 5 வாய் மூச்சும் நாசி மூச்சும், 6 நான்குவகை மூச்சு, 7 முழு மூச்சின் அப்பியாசம், 8 முழு மூச்சாலுண்டாகும் நன்மைகள், 9 சுவாசத்தின் சில முதல் முறைகள், 10 பத்துச் சிறு அப்பியாசங்கள், 11 யோகியின் 10 அப்பியாசங்கள், 12 யோகியின்லய மூச்சு, 13 யோகியின் மனோலய மூச்சு, 14 மனோவசிய சாதனை, 15 ஆத்மார்த்த அப்பியாசம் என்னும் பதினைந்து அத்தியாயங்களுள்ளன. இதில் விஷயத்தை விளக்க அனேக சித்திரப்படங்களும் உள்ளன. இவற்றின் உதவியைக்கொண்டு இதிலுள்ள எந்த விதமான அப்பியாசங்களையும் வேறொருவர் உதவியின்றிச் சுயமே செய்துகொள்ளலாம். சுவாசத்தின் மகா இரகசிய தத்துவ முழுதும் இதில் மிக நன்றாக வியவகரிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய 15 அத்தியாயங்களிலும் ஆயுளை நீடிக்கச் செய்தல், நோயைத் தடுத்தல், தூரத்திலிருப்போருக்குச் சிகிச்சை செய்தல், பிறர்மன ஆராய்ச்சி தேஜஸைப் பெறுதல், நீரில் ஜீவதாதுவை ஏற்றல், நற்குணம் எய்தல், தேகாரோக்கியம் பெறுதல், ஆத்திரத்தை யடக்கல், சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கல், ஆத்மாவை யறிதல், விசுவ ஜீவனை உணர்தல் முதலிய பல பல அரிய விஷயங்கள் காணப்படுகின்றன. இதில் அசல் சாண்டோவின் படமும், அவருடைய முக்கியமான முறைகளும் ஒரு புதிய அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான நூல் இப்பொழுதுதான் முதன் முறையாகத் தமிழில் வெளிவந்திருக்கிறது. 210 பக்கங்களுக்கு மேலுண்டு, 37-படங்களும், ஒரு ஹாப்டோன் படமும் உண்டு. அழகிய காலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 1-8-0. வி. பி. செலவு வேறு.

தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை,
22, பிராட்வே, தாபால் பெட்டி 15, சென்னை.



ஜாதிமத பேதா பேதம் கற்பியாது உழைத்துவர திடம் கொண்டிருப்பது "தென் நாடு". இது எவரும் தாழ்த்தப்படுவதை வெறுத்து, சம உரிமையை நிலை நாட்ட உழைப்பது. பலரும் நன்மையடைய வேண்டி இவ்வருஷம் ஜனவரி முதல் ரூ. 4 சந்தாவாக இருந்ததை ரூ. 3 ஆக்கி வெளியிடப்படுகிறது. 6 மாத சந்தா ரூ. 2 ஆகும்.

இதற்கு ஊக்கமளிக்க விரும்புவோர் :—

மானேஜர்,
தென் நாடு,
சென்னை

என்று எழுதிப் பெறலாம்.
வெளி நாட்டுக்கு வி. பி. கிடையாது.



JL
Lm211, N24
N31. 8-6

# "கோக்கோமால்ட்"

மிகுந்த போஷணகுணமுள்ள ஆகாரப்பானம். சூடாயிருந்தாலும் ஜில்லென்றிருந்தாலும் இனிப்பைத்தரக்கூடியது.

நிகரற்ற ஆரோக்கியமுள்ள ஆகாரம்.

½ பவுண்டு, 1 பவுண்டு, டின்களில் கிடைக்கும்.

## கோக்கோமால்டில்

சூரிய வெளிச்சத்திலுள்ள ஜீவஸத்துப் பொருளும், ஏ. பி. கலந்த ஜீவஸத்துப் பொருள்களும் அடங்கியுள்ளன. அதில் நிரம்பியுள்ள சாக்லெட், பாலேட்டு மணத்தை குழந்தைகள் விரும்புகின்றன.

அதை பரீக்ஷித்துப்பார் உனக்கு நன்மையுண்டு.

---

டிஸ்ட்ரிபியூடர்கள்.

## டாட்ஜ் அண்டு சைமோர் லிமிடெட்,

**10/14** அரமனைக்காரத் தெரு, சென்னை.

# பால வித்யா.

## 1930ஞு ஜனவரிமீ முதல் இது ஒவ்வொரு இங்கிலீஷ் மாதத்திலும் வெளிவரும் தமிழ் ஜர்னல்.

இதில் மகா அற்புதமான நாவல்கள் மாதம் ஒன்றுக்கு 40 பக்கங்களுக்கு குறையாமல் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்படும்.

இதுவரையில் வெளிவந்த நாவல்களைவிட இதில் சிறுவரும், சிறுமியரும் உவந்து படித்து புகழக்கூடிய உயர்ந்த நீதிகளும் கற்பின் பிரபாவமும், காதலின் தன்மையும், உலக நடவடிக்கைகளும் ஹாஸ்யவினோத அற்புதச் செய்கைகளும் பொருந்தியுள்ள கவீனங்களாக இருக்கும்.

புத்தகம் முடிந்த பிறகு ஏற்படுத்தப்படும் விலையைவிட இந்த ஸஞ்சிகை சந்தாதாரர்களுக்கு ஷை நவீனங்கள் குறைந்த விலைக்கு அடங்கும்.

நேயர்கள் உடனே சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரிக்கும்படி கோரப்படுகிறது.

**வருட சந்தா :—**

தபாற்கூலியுள்பட ரூபா. **1-8-0** தான்.

வெளிநாடுகளுக்கு ரூபா. **2-0-0.**

எல்லா, இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

ஏஜண்டுகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

**N. B.**—பால வித்யா மாதிரி (இனும்) ஸஞ்சிகை விரும்புவோர் தபாற் கூலிக்காக ½ அணா லேபில் அனுப்பி விலாஸமும் தெரிவித்தால் பெற்றுக்கொள்ளலாம்.

பப்ளிஷர்ஸ் :—

ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.





# ஆரோக்கியதீபிகை

ஆரோக்கியமார்க்கங்களைப் போதிக்கும் பத்திரிகை

17 OCT 1931

ஆரோக்கிய மார்க்கங்களைப் போதிக்கும் பத்திரிகை

ஆசிரியர், டாக்டர், யூ. ராமராவ், யூ. கிருஷ்ணராவ், எம்.பி.பி.எஸ்.

பத்திரிகாலயம் : 323, தம்புசெட்டித் தெரு, சென்னை.

வருடச் சந்தா உள்நாடு ரூ. 1-8-0. வெளிநாடு ரூ. 2-0-0. தனிப்பிரதி விலை அணா 2.

தொகுதி 8] ஜூன், 1931 [பகுதி 6


# வம்சவிருத்தியை அடக்குமுறை

## 1. வம்சவிருத்தியை அடக்கும் பிரயத்தனத்தைக் குறித்த சுருக்கமான சரித்திரம்.

சென்ற சில வருஷங்களாக வம்சவிருத்தியை அடக்குமுறையானது, முக்கியமாய் மேனாடுகளில், இலௌகிக, வைத்தியப் பத்திரிகைகளிலும், தினசரி வர்த்தமானப் பத்திரிகைகளிலும், பிரசார மேடைகளிலும், மகா நாடுகளிலும், சபைகளிலும், சர்வஜன சங்கத்துக்குரிய ஆராய்ச்சி இடங்களிலும், வைத்திய விஷயமாகச் செய்யும் ஆராய்ச்சி சாலைகளிலும், சுருக்கச் சொல்லுமளவில், முன்னே எங்கெங்கெந்த இடங்களில் இவ்விஷயத்தைக்குறித்து உச்சரிக்கவும் கூடாதோ அந்தந்த இடங்களிலெல்லாம், நுழைய ஆரம்பித்துவிட்டது. அதிக விரைவாக இம்முறை நமது இந்தியா தேசத்திற்கும் வந்து சேர்ந்துவிட்டது. இப்போது வைதீக, பூர்வாசாரப்பற்றுள்ள நமது தேயத்தில் அநேக வம்ச விருத்தியை அடக்குமுறையைச் சேர்ந்த நிர்மாண ஸ்தலங்களும், இதைக்குறித்த அநேக பத்திரிகைகளும், ஒரு ஆஸ்பத்திரியும் கூட, உண்டாய்விட்டன. இம்மாதிரி ஆஸ்பத்திரியானது முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள மைசூர் ராஜ்யத்தில் சில நாட்களுக்கு முந்திதான் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஸ்திரீபுருஷ சம்பந்தமான ஒரு பிரசனையாக விருப்பதும் தவிர, அதைச்சார்ந்த மற்ற ஜன சமூகவிஷயம், வரவு செலவு திட்டம், வைத்தியம், பிராணி சாஸ்திரம், தேகசுகாதாரம், மனோசாஸ்திரம், பிரஜோத்பத்தியைக் குறித்த சாஸ்திரம், ஜனன மரணக் கணக்கு, ராஜாங்கம், நீதிநெறி, ஆத்ம விஷயம், ஆகிய இவைகளைக் குறித்த விசாரணையும் இப்பிரசனையில் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆனதுபற்றி, இவ்விஷயத்தை அடியோடே நிராகரித்து விட முடியாது. நமது "ஆரோக்கிய தீபிகை" யில், லஜ்ஜையையுண்டுபண்ணக்கூடிய சிக்கலான இந்த விஷயத்தைக் குறித்து நாம் எழுதத்துணிந்ததற்கு இதுவே ஒரு மன்னிப்பாகும்.

வம்ச விருத்தியை அடக்குமுறை என்றால், ஒரு தாயானவள் தனது தேகத்தில் வலுவு குன்றியிருக்கையில் மக்களைப் பெறுதலைமட்டுப்படுத்தல் என்றர்த்தம். இப்பிரயத்தினத்திற்கு ஆதிகர்த்தா, ரேவரெண்டு ராபர்டு மால்தஸ் என்னும் ஒரு இங்கிலீஷ்காரர். ஆனால் இவருக்கு முந்தியும் கூட, வம்ச விருத்தியை அடக்குமுறைகள் இருந்ததாகவும் தெரியவருகிறது. செயற்கை முறைகளில் கர்ப்பம் தரிக்கவொட்டாமல் செய்வதற்கு வேண்டிய உபதேசங்களை மால்தஸ் என்பவர் செய்யவில்லை. 1798ம் வருஷத்தில் அவர் எழுதிய "பிரின்ஸிபில் ஆப் பாபுலேஷன்" என்னும் புஸ்தகத்தில், இப்பூலோகமானது ஒரு குறித்த ஜனத்தொகையைத்தான் காப்பாற்ற முடியுமென்று வாதித்து, புத்திசாலித்தனத்தினாலும், மனதைக் கட்டுப்படுத்துவதினாலும் அதாவது தனக்கு சம்சாரத்தைக் காப்பாற்ற போதுமான வருமானம் வரும்வரையில் விவாகம், நிஷேகம் முதலியவற்றை ஒதுக்கிவைப்பதினால், ஜனத்தொகையைக் குறைக்கலாமென்று அவர் வற்புறுத்தியிருக்கிறார். இக்கொள்கைகளினின்றும், நியோ மால்தூஸியன் பிரயத்தனம் என்று ஒன்று உற்பத்தியாயிற்று. ஜனன விகிதத்தைக் குறைத்து அதனால் ஜனத் தொகையைக் குறைக்க வேண்டுமென்பது இச்சபையாரின் கொள்கை. இது பெரும்பாலும் வருமான விஷயத்தைப்பற்றியதாகும். இவர்கள், செயற்கை முறைகளால், கர்ப்பம் தரிக்கவொட்டாமல் செய்து அதன் மூலமாய் ஜனசங்கியைக் குறைக்க வேண்டுமென்று உபதேசிக்க ஆரம்பித்தனர். இச்சபையாரின் பிரயத்தனங்கள் தாம் இப்போது பூலோக முழுதிலும் பரவிக்கொண்டிருக்கிறது. வம்சவிருத்தி அடக்குமுறை தவிர, ஸ்திரீகளுக்கு சுயேச்சை, தாய் சிசு இவர்களின் ஜீவியத்தையும் ஆரோக்கியத்தையும் பாதுகாத்தல், ஜனநெருக்கத்தைக் கம்மிப்படுத்தல், தகாத பிள்ளைகளையும் வேண்டாத பிள்ளைகளையும் உற்பத்தி செய்யவொட்டாமல் தடுத்தல் ஆகிய இவ்விஷயங்களிலும் இச்சபையார் ஈடுபட்டுள்ளார். இந்த நியோ மால்தூஸியன் பிரயத்தனத்திற்கு ஆதிகர்த்தா ப்ரான்ஸிஸ் ப்ளேஸ் என்பவர். இவர் மகா தரித்திரத்தில் உழன்று தையர்காரருக்கு எஜமானன் என்னும் உன்னத ஐசுவரிய பதவியை அடைந்தவர், ப்ளேஸ், லண்டன் தொழிலாளிக் கூட்டத்தில் உற்பவித்தவரானபடியால் அவர் மனோபாவங்கள் யாவும், தொழிலாளர்பாலே சென்றன. இந்த ஜனத்தொகை பிரசனையானது நேரிடையில் அவருக்கே விசிதமாயிற்று. வெகு பாலியத்திலேயே அவர் விவாகம் செய்துகொண்டு 14 அல்லது 15 மக்களைப் பெற்றனர். அதிக ஜனத்தொகையின் அர்த்தம் அவர் அனுபவத்திலேயே அவருக்குத் தெரியவந்தது. ஆனால் தான் விவாகம் செய்து கொள்ளாமலிருந்தால், கெட்ட நடத்தையில் ஈடுபட்டு அங்கியாயமாய் அழிந்து போயிருப்பார் என்று மட்டும் அவர் அறிந்து கொண்டார். ஏழைகளின் ஜனத்தொகையை அடக்குதற்கு, தகுந்த உபாயம் பால்ய விவாகமும், வம்ச விருத்தியை அடக்குதலேயாம் என்று அவர் தீர்மானித்தார். இவரது கொள்கைகள் யாவும் 1822ம் வருஷத்தில் இவர் எழுதிய "இல்லஸ்ட்ரேஷன்ஸ் அண்டு ப்ரூப்ஸ் ஆப் தி ப்ரின்ஸிபல் ஆப் பாபுலேஷன்" என்னும் ஒரு புஸ்தகத்தில் அடங்கியுள்ளன.

அடுத்தபடி இது விஷயமாக 1833ம் ஆண்டில் மெஸாசுஸெட்ஸைச் சேர்ந்த டாக்டர் சார்ல்ஸ் நௌலிஸ் என்பவர் ஒரு புஸ்தகம் எழுதியுள்ளார். இது இங்கிலாந்தில் மறுபடியும் அச்சிடப்பட்டு, சுமார் 40 வருஷகாலமாக முன்னேற்றத்தில் ஈடுபட்ட தொழிலாளிகளிடமும் சுயேச்சையில் ஈடுபட்டவர்களிடமும் இது வழங்கி வந்தது. 1876ம் வருஷத்தில் இது விஷயமாக சிலரைக் குற்றம் சாட்டப் பட்டதால், இப்புத்தகத்திற்கு தற்செயலான ஒரு பெருத்த மகிமை உண்டாய்விட்டது. இதன் மத்தியில் மற்றோர் புத்தகம் தோன்றிற்று. அது இதைவிட முக்கியமானது. இதற்கு



முதன் முதல் 'பிஸிகல், செக்ஷுயல் அண்டு நாடுரல் ரிலிஜன்' என்னும் ஒரு ஆச்சரியகரமான நாமதேயம் கொடுக்கப்பட்டது. பிறகு இதற்கு "தி எலிமெண்ட்ஸ் ஆப் ஸோஷியல் சயன்ஸ்" என்னும் பெயர் அளிக்கப்பட்டது. இதன் பெயரில்லாத கிரந்தகர்த்தா டாக்டர் ஜார்ஜ் ட்ரிஸ்டேல் ஆவார். இப்புத்தகம் 1854ம் ஆண்டில் பதிக்கப்பட்டது. இதன் கருத்து யாதெனில் தேகத்தின் தொழில்களும் மனதின் தொழில்களும் முக்கியத்தில் சரிசமானமானவை. தேகத்தை எவ்வாறு வளர்த்து அப்பியஸிக்கிறோமோ, அவ்வாறே மனதையும் வளர்த்து அப்பியசிக்கவேண்டும் என்பதே. இவ்விதிக்கு ஸ்திரீ புருஷர் சம்பந்தமும் கட்டுப்பட்டதேயாகும். இங்கிலாந்தில், இந்த வம்சவிருத்தி அடக்குமுறை விஷயத்தில் டாக்டர் பிஸண்டு அம்மாள் பேரும் ஆதியில் அடிபட்டது. அந்த அம்மாளும், அந்த அம்மாளுடன் ஒற்றுழைத்த சார்ல்ஸ் ப்ராட்லாவும் தடுக்கப்பட்ட டாக்டர் நொவுலிஸ் புத்தகத்தை இவர்கள் அச்சிட்டதற்காக குற்றஞ்சாட்டப்பட்டனர். இந்த பிரயத்தினத்திற்கு இவ்வழக்கினால் இன்னும் அதிக மேம்பாடு ஏற்பட்டுவிட்டது. இப்போது சீர்படுத்தப்பட்டதோ, சீர்படுத்தப் படாததோ இவ்வியாபகம் உலகமெங்கும் பரவியிருக்கிறது. இங்கிலாந்தில் 1878ம் வருட முதல் ஜனன விகிதம் வெகுவாய்க் குறைந்துவிட்டது. எங்கெங்கே ஜனன மரணக் கணக்குகள் வைக்கப் பட்டிருக்கின்றனவோ அங்கங்கே ஜனன விகிதம் குறைந்திருப்பதற்கு வேண்டிய அத்தாக்ஷியும் ஏற்பட்டிருக்கிறது. இப்போது நாகரீகமுள்ள நாடுகள் எங்கும் தலையெடுத்துள்ள இந்த வம்ச விருத்தியை அடக்குமுறைப் பிரயத்தினத்தின் சுருக்கமான சரித்திரம் இதுவாகும்.

பிரஜோற்பத்தி சாஸ்திரமும் அதற்கு பின்னிட்டு உண்டான வம்ச விருத்தி அடக்குமுறையும் புராதன இந்தியாவிற்குத் தெரிந்த விஷயமே. வாஸ்தவத்தில் சேர்த்தியான மக்களைப் பெறுதலிலும், பௌரஷமான ஜாதியை உற்பவிப்பதிலும் நமது முன்னோர்கள் சிரத்தையெடுத்து வந்தனர்.

புராதன இந்தியாவில் ஒரு ஹிந்துவின் ஜீவியகாலம் 4 தகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதல் தகுதி மாணவன். இதில் கட்டாயமான பிரம்மசரிய விரதம் அனுஷ்டிக்கும்படி விதிக்கப்பட்டிருந்தது. இத்தகுதி 8 வயதில் தொடங்கி 25 வருட காலம் நீடித்து வந்தது. இரண்டாவது தகுதி கிரகஸ்தன். விவாகம் செய்துகொண்டு குடும்பத்துடன் வாழும் தகுதி இதுவாகும். குறைந்தது ஒரு ஆண்பிள்ளையாகிலும் பெறுவது ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கக்கூடிய பெருத்த சுகமாகும். "குழந்தைக்கு பால்கொடுக்காத மலடியே பாக்கியசாலி" என்னும் ஒரு இங்கிலீஷ் பழமொழி, புராதன இந்து ஸ்திரீகளுக்கு ஏற்பட்டதல்ல. அந்த காலத்தில் சம்பார்க்கம் மட்டும் அதிக மிதமாயும் அநேக தடைகளுடனும் செய்யும்படி விதிக்கப்பட்டிருந்தது.

"ஒரு மாதத்தில் சம்பார்க்கத்திற்கேற்ற நாட்கள் 16 ஆகும். வைதீகர்கள் விலக்க வேண்டிய நாட்கள் 4 (6?) பிரத்தியேகம். (இவை ஒவ்வொரு பக்ஷத்திலும் அஷ்டமி, சதுர்த்தசி, அமாவாசை அல்லது பௌர்ணமி ஆகிய பர்வ தினங்களாகும்.)—[மனு. பிரசங்கம் iii. 46.]

"மேற்சொல்லிய 16 நாட்களில், முதல் நான்கு நாட்களும், 11ம் நாளும், 13ம் நாளும், சம்பார்க்கத்திற்கு ஆகாத நாட்கள். மீதி 10 நாட்கள் நற்றினங்களாகும்.—[மனு. பிரசங்கம் iii. 47.]

"ஆகாத நாட்களிலும் பர்வதினங்களாகிய 8 நாட்களிலும் சம்பார்க்கம் செய்யாமல் ஒருவன் இருந்தால் அவன் பிரம்மசாரிக்கு சமானமாவான். (அதாவது எந்த ஆஸ்ரமத்தில் இருந்தபோதிலும் கற்பு விரதத்தை காப்பாற்றினவனென்றே சொல்லவேண்டும்.)—[மனு. பிரசங்கம் iii. 50.]

மற்ற இரண்டு தகுதிகளிலும் (அதாவது வானப்பிரஸ்தம், சன்னியாஸி ஆஸ்

ரமங்களில்) உலக இச்சைகளையும் சிற்றின்பத்தையும் வெறுக்கவேண்டும்.

"ஒருவனுக்கு முகத்தில் மடிப்பு விழுந்து, ரோமம் நரைக்க ஆரம்பித்து, பேரன் பேத்தி பிறந்ததும் அவன் வனத்திற்கு ஏகவேண்டும்."—[மனு. பிரசங்கம் 6. 2.]

"தன் பத்தினியை பிள்ளைகளிடமாவது ஒப்புவித்துவிட்டு அல்லது பத்தினி சமேதராயாவது வனமேகவேண்டும்.—[மனு. பிரசங்கம் 6. 3.]

"அங்கே இந்திரயங்களை அடக்கி வசித்தல் வேண்டும்.—[மனு. பிரசங்கம் 6. 4.]

இந்திரியங்களை அடக்கி வம்ச விருத்தியை அடக்குதல் பழையகாலத்து ஹிந்துக்களின் கொள்கையென்று மேற்சொல்லியவற்றால் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. மால்தூஸியன் கொள்கை இதுவே. ஆனால் நியோ மால்தூஸியன் கொள்கையிலோ தடைமருந்தை உபயோகிக்கும்படி சொல்லப்படுகிறது. பூலோகத்தில் ஜனத்தொகை விருத்தியாகி, அதனால் ஏழ்மைத்தனமும் கஷ்டமும் உண்டாவதைத் தடுக்க, வம்சவிருத்தியை அடக்குமுறை வேண்டியதவசியமென்றே நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், அனுஷ்டிக்கும் உபாயங்களைக் குறித்துத்தான் நமக்குச் சந்தேகம். மனத்தால் அடக்குவதா, மருந்தால் அடக்குவதா இவற்றுள் எது ஆரோக்கியமுள்ளது என்பதை அடுத்த இதழில் விசாரிப்போம்.

---

# பிறவாத சிசு,—பிறந்த சிசு இவற்றின் பிரசனை. ஒரு பெருத்த தேசியப் பிரசனை.

டாக்டர் மெஸர்ஸ் ஆனா தாமஸ், கராச்சி.

இங்கிலாந்து தேசத்து பிரசித்திபெற்ற ஒரு கவிராயர் பின் வருமாறு பாடியுள்ளார் :—அதாவது "குழந்தை மனிதனுக்கு தகப்பனாகும்" "இன்றைக்குக் குழந்தை நாளைக்கு நகரத்தான்". "குழந்தையின் அறையில் சரித்திரம் உண்டாயிற்று". பிறவாத சிசுவிற்கும் பிறந்த சிசுவிற்கும் நாம் எவ்வளவு கவனத்தை செலுத்துகிறோமோ, அதைப் பொருந்திநிற்கும் நமது தேசியப் பலம். "நமது ராஜ்யத்தின் அஸ்திவாரமானது சிறுவர்களை நாம் சரியானபடி பாதுகாப்பதில் இருக்கிறது" என்று அநேக வருடங்களுக்குமுன் லிஸரோ சொல்லியிருக்கிறார். ஆனதுபற்றி, இந்த அஸ்திவாரம் செவ்வையாய் போடப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்ப்பது ராஜாங்கம், ராஜ்ஜிய காரிய நிபுணன், தேசாபிமானி ஆகிய இம்மூவரின் முக்கிய தொழிலாகும்.

## பிறந்த குழந்தை.

முதல் முதல் பிறந்த குழந்தையின் பிரசனையைக் குறித்துக் கவனிப்போம். புள்ளி விவரங்களைப் பரிசோதித்துப் பார்த்தால் இந்தியாவில் சிசு மரண விகிதம் அதிகமாகவிருக்கிறதென்று ஏற்படுகிறது. சுமார் 10 மிலியன் அதாவது ஒரு கோடி குழந்தைகள் வருடவாரி பிறக்கின்றன. அவற்றுள் ஒரு வயதிற்குள் 25 லக்ஷம் சிசுக்கள் இறக்கின்றன, அதாவது, தினசரி, இந்தியாவில் 6900 சிசுக்கள் மரிக்கின்றன. இந்தியாவில் தவிர, மற்ற, பூலோகத்தில் எந்த தேசத்திலும் இம்மாதிரி சிசு மரணம் அதிகரித்திருப்பதில்லை என்று புள்ளி விவர நிபுணர்கள் பரிசோதித்துச் சொல்லியிருக்கிறார்கள். "சிசு மரண விஷயமாக யோசித்துப் பார்த்தால், இந்தியாவானது மகா பாதகபூமி என்று சொல்வது தகும். அருவருக்கத்தக்க இந்த



அதிகமாக சிசுமரண விகிதத்தால் என்ன ஏற்படுகிறதென்றால், ஒரு குலமே அடியோடே நாசமாகும்படியான காரணங்களும் நிலைமைகளும் இந்தியாவில் வியாபித்திருக்கின்றனவென்பதே. ஒரு தேசத்தின் பலம் அதன் குழந்தைகளிடம் இருக்கிறதென்று ப்ளேடோ சொல்லியிருக்கிறார். சிசுமரணம் கம்மியாகவிருந்தால், ஆண் பெண் இவர்கள் பழுதுபோவது கம்மியாகவிருக்கிறது, அதனால் யாவர்க்கும். அதிக பலமும் தீர்க்காயுளும் ஏற்படுகிறது. இந்தியாவில் இந்த அபாரமான சிசு மரணம் தினம் நேரிடுவது, தேசத்தின் வருமான நஷ்டத்திற்குக் காரணம்.

## வருமான விஷயம்.

அமெரிக்காவில் ஒரு குழந்தை இறந்துபோனால் ராஜாங்கத்திற்கு 1700 டாலர்கள் நஷ்டமென்று அமெரிக்கா தேசத்து இர்வின் பிஷர் என்பவர் கணக்கெடுத்திருக்கிறார். மேலும் அந்த தேசத்தில் சிசு மரணம் 100க்கு 42 விகிதம் தடுக்கக்கூடிய வியாதிகளால் நேரிடுகிறதென்றும் கணக்கெடுத்திருக்கிறார். இதை ஒரு அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு, வருஷத்திற்கு இந்தியாவில் மொத்த வருமான நஷ்டம் எவ்வளவென்று கணக்கெடுத்துப் பார்த்தால், அது 1,785,000,000 டாலர்கள் ஆகின்றன. ஆனால் அமெரிக்காவில் ஒருவன் சம்பாதிப்பதில் ஐந்தில் ஒரு பங்குதான் இந்தியன் சம்பாதிக்கிறபடியால், மொத்த நஷ்டம் 357,000,000 டாலர்கள் என்று ஏற்படுகிறது. இந்த நஷ்டம் தடுக்கக்கூடிய சிசு மரணத்தினால் உண்டாகிறது. இந்த நஷ்டத்தைத் தடுக்கக்கூடும் என்பதைக் கவனியுங்கள்.

## இப்பிரசனையை எவ்வாறு தீர்மானிப்பது.

"வியாதியை சொஸ்தப்படுத்துவதைவிட அதைத் தடுப்பது நலம்" என்று பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குக்கூட தெரிந்த விஷயம். தடுக்குமுறையானது வெகுசுலபமான விஷயம். கொஞ்சம் புத்திசாலித்தனம் இருந்தால் போதும். ஆனால் படித்தவர்கள்கூட இது விஷயத்தில் பாராமுகமாய் இருப்பதைப் பார்த்தால் மனதிற்கு ஆயாசமாகவிருக்கிறது. ஆனால் குழந்தைப் பரிபாலன விஷயத்தில் இப்போது அநேகர் ஈடுபட்டிருப்பதால், குழந்தைப்பிரசனையைக் குறித்து பொதுவாய் எங்கும் கிளர்ச்சி உண்டாயிருக்கிறது. மேனாடுகளில் குழந்தைப் பரிபாலனம் மும்மரமாய் 25 வருடகாலம் நடந்து வந்ததில் அங்கே, 25 வருடத்துக்குமுன் இருந்த சிசு மரணமானது, கால்வாசிதிட்டத்திற்கு குறைந்துவிட்டது. ப்ரான்ஸ் தேசத்தைச்சார்ந்த வில்லியர்ஸ் டி. லியூகா என்னும்முனிசிபாலிடியில்மட்டும் சிசு மரணவிகிதம் பூஜ்ஜியத்திற்கு வந்து இறங்கிவிட்டது. இதேமாதிரி அங்கே பத்து வருட காலமாக இருந்து வருகிறது. இந்தப் பிரசனையை முடிவுக்கு கொண்டுவரவேண்டுமென்றால், தாயின் கர்பத்திலிருந்தே குழந்தையைப் பாதுகாக்கவேண்டுமென்று ஆராய்ச்சிகளினாலும் அனுபோகத்தினாலும் ஏற்படுகிறது. "விதைக்குத்தக்கபடி நிலத்தைத்தயாரிக்கவேண்டு"மென்று சாஸ்திரமும் முறையிடுகிறது. ஆனதுபற்றி சிசுக்களைக் காப்பாற்றவேண்டுமானால் முதலில் கர்ப்பிணியாயிருக்கும் தாயைப்பாதுகாக்க வேண்டும். இந்தியாவில் கிராமந்தரங்கள் அதிகம். 32 கோடி ஜனத்தில் 27 கோடி கிராமந்தரங்களில் வசிக்கின்றன. கிராமங்களில் வசிக்கும் ஸ்திரீகளுக்கு, பிரசவ சமயத்தில் தேர்ச்சிபெற்ற மருத்துவம் கிடைப்பதரிது. கர்ப்பம் தரித்து முதல் பிரசவமாகும்வரையில் ஒரு ஸ்திரீயானவள் மூடபக்தியுள்ள பாட்டிமார்கள் ஆதீனத்திலும், அசுத்தமானதும், படிப்பில்லாததும், தேர்ச்சியற்றதுமான நாட்டுபுறத்திலுள்ள மருத்துவ ஸ்திரீகள் கையிலும் அகப்பட்டு தவிக்க நேரிடுகிறது.

## மருத்துவ ஸ்திரீயைக் குறித்த பிரசனை.

நாட்டுப்புறத்திலுள்ளவர்களுக்கு, பிரசவம் முதலிய விஷயத்தில் மருத்துவ

ஸ்திரீதான் பெறுத்த துணையாகும். 15 வருடகாலமாக தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் எனக்குண்டாயிருக்கும் வைத்திய அனுபோகத்தினால் என்ன ஏற்படுகிறதென்றால், பட்டணவாஸங்களில் உள்ள ஜனங்களுக்குக் கூட மருத்துவ ஸ்திரீகளின்மேல் அதிக நம்பிக்கை உண்டென்பதே. அறியாமையினாலேயே இந்த மருத்துவ ஸ்திரீகள் தங்கள் அழுக்கடைந்த கைகளைக் கொண்டு, அனாவசியமாய் மர்மஸ்தானங்களைப் பரிசோதித்து, அதனால் தாய்க்கும் சிசுவிற்கும் ஆபத்தை விளைவிக்கின்றனர். பிரசவமானதும் தாய்க்குவரும் அநேக ஆபத்துகளுக்கும், சிசுவிற்கு உண்டாகும் வலி முதலியவற்றிற்கும் காரணம், இந்த மருத்துவ ஸ்திரீகள் அறியாமையினால் பிரசவத்தின்போது செய்யும் காரியமே. ஐயோ பாவம்! ஜனங்களுக்கு இந்த கஷ்டம் மருத்துவ ஸ்திரீயினால் நேரிடுகிறதென்று தெரியாது. இவர்களை ஒழித்து, கர்ப்பமாயிருக்கும் போதே தகுந்த எச்சரிக்கை எடுத்துக் கொண்டு தேர்ச்சியடைந்த மருத்துவ ஸ்திரீகளைக்கொண்டு பிரசவத்தை நடத்தினால் இதைத் தடுக்கமுடியுமென்று ஜனங்களுக்குத்தெரியாது. மருத்துவ ஸ்திரீயினால், குழந்தையாவது, தாயாவது இறந்துவிட்டால், விதிவசம் இவ்வாறு நேர்ந்தது என்று அக்கம்பக்கத்திலுள்ள உறவினர் யாவரும் சொல்லுவார்கள். வீட்டுக்கிழவியோ, "மருத்துவச்சி என்ன செய்வாள், பாவம், அவள்பேரில் தப்பு சொல்லக்கூடாது; நூற்றுக்கணக்காய் இந்த ஊரில் அவள் பிரசவம் பார்த்திருக்கிறாள். எல்லாம் சுகப்பிரஸவமாகவேயிருந்தது." என்று சொல்லுவாள். முற்றிப்போன, சிக்கலான சில கேஸுகளில், கடைசியாக வைத்தியரைக் கூப்பிடுகிறது. காலம் கடந்தமையால், அவரால் ஒன்றும் முடியாமற்போனால், உடனே மருத்துவச்சி "பாரம்மா! டாக்டர்களால் கூடமுடியவில்லை. அது ஏது. சித்திரகுப்தன் எழுதிவைத்தவடு கிழிந்துபோயிற்று. யமன் வந்து தூக்கிக்கொண்டு போய்விட்டான். யார்தான் என்னசெய்யலாம் மருத்துவச்சியால் முடியவில்லை என்றால் நான் என்ன செய்கிறது" என்று சொல்லி மனதை நிம்மதிசெய்து கொள்வார்கள். படித்தவர்கள் வீடுகளில் கூட, முக்கியமாய் வைதீகர்களின், வீடுகளில், அநேக சந்தர்ப்பங்களை நான் கவனித்திருக்கிறேன். அவர்கள், 'பிரசவம் புருஷர்களுக்கு சம்பந்தமான விஷயமன்று, வீட்டில் கிழவியிருக்கிறாள் பார்த்துக் கொள்ளுகிறாள், அவள் சொல்லுகிறபடிதான் நடக்கவேண்டுமென்று' என்று அசட்டையாயிருந்துவிடுகிறார்கள். இந்தப் பாட்டிமார்கள் எதற்கும் தடங்கல் சொல்லுவார்கள். காலமை காபிமட்டும் போனால் போகிறது கொடுங்கள், மற்றது எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்லுவார்கள். அவளுடைய படித்த பேரன்மார்கள்கூட, அவளை எதிர்த்து பிரசவத்திற்கு தேர்ச்சிபெற்ற தாதியை வரவழைக்க முடியாது. அந்தக் கிழவியோ, "நான் 15 பிள்ளைகளைப் பெற்றேன். பெண்கள், நாட்டுப் பெண்கள், பேத்திமார் இவர்களின் பிரசவத்தை, மருத்துவச்சியைக் கொண்டே நடத்தினேன்'. என்று பெருமை பாராட்டிக் கொள்வாள். பழையகாலத்து சமாசாரம் அது, அப்போதிருந்த ஆரோக்கியம், சுற்றுப்பக்கத்து நிலைமை யாவும் மாறிப்போய்விட்டது. தற்காலத்து நிலைமைக்குத்தக்கபடி நடந்துகொள்ளவேண்டுமென்றால் கேட்கமாட்டாள். ஆபத்து வந்துவிட்டால், விதிப்பிரகாரம் நடந்தது, நாம் என்ன செய்யலாம், எல்லாம் அவன் செயல்' என்று சொல்லி தத்துவம் பேசுவாள். இந்தியா கவர்ன்மெண்டு பப்ளிக் ஹெல்த் கமிஷனர், தான் எழுதியுள்ள ஒரு வருஷாந்தர ரிபோர்டில் மருத்துவச்சியைப்பற்றி பின் வருமாறு எழுதியிருக்கிறார் :—

இந்தியாவில் பெரும்பாலும் பிரசவத்திற்கு மருத்துவச்சிகள் வந்து பார்க்கிறார்கள். அவர்கள் பிரசவத் தொழில், பழக்கவழக்கத்தை ஒட்டினதேயன்றி, படித்துத் தேர்ந்ததை ஒட்டியதன்று, இவர்கள் கீழ்ஜாதியைச் சேர்ந்தவர்கள். அசுத்தமான பழக்கங்களை உடையவர்கள். அசுத்தமான உடைகளைத் தரித்துக்கொண்டும் கைகள் நிரம்ப வளையல்களை இட்டுக்கொண்டும், விரல்களில் உபயோகமற்ற மோதிரங்களைப் போட்டுக்கொண்டும் இருப்பார்கள். அவர்கள் ஆயுதமெல்லாம் ஹுக்கா பிடிக்கும் குழாய்ப்போல் ஒரு குழாயும் அழுக்கடைந்த பழைய கத்தியும், ஒரு சிறு விளக்கெண்ணெய் விளக்குமாகும். அந்த விளக்கெண்ணெய் விளக்கு எரிவதற்கும், மர்மஸ்தானத்தில் தடவுவதற்கும் உபயோகப் படுத்தப்படுகிறது. கந்தத்துணிகள் அல்லது படுக்கையிலிருந்து பிடுங்கிஎடுத்த பழைய கம்பளத்துண்டு, கொஞ்சம் கயிறு ஆகிய இவற்றுடன் அவளுடைய முஸ்தீப்பு முடிகிறது.



மேற்சொல்லிய விவரமானது வட இந்தியாவிலுள்ள மருத்துவஸ்திரீகளுக்கு மிகப்பொருந்தும். தென் இந்தியாவின் மருத்துவஸ்திரீகளின் பார்வை, முஸ்தீப்பு இவைகளில் கொஞ்சம் வித்தியாசம் உண்டு. ஆனால் அறியாமை, முரட்டுத்தனமான வழக்கங்கள் இவைகளில்மட்டும் ஒன்றும் வித்தியாஸம் கிடையாது. சென்னையில் சர்ஜன் ஜெனரலாயிருந்த கர்னல் கிப்பர்டு என்பவர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார் :—"இந்தியாவில் பிரஸவம் இன்னும் பயங்கரமான நிலையில் இருக்கிறது. மிகுந்த அசுத்தமானவர்களும், கீழ்ஜாதியாரும், படிப்பில்லாதவர்களும், மூடர்களும், மூடபக்தியுள்ளவர்களுமான நாவித மருத்துவ ஸ்திரீகளிடம் பிரஸவத்தை ஒப்பிவைப்பது வழக்கம். இந்தப்பழக்கத்தினால், கஷ்டத்திற்கும் அனாவசியமான மரணத்திற்கும் உள்ளாகிறார்கள். "ப்ரான்ஸ் தேசத்து கிரந்தகர்த்தாவாகிய கை. டி. மெளபாஸண்டு என்பவர். "ஒரு ஸ்திரீயின் ஜீவியம்" என்னும் நாவலில், நாட்டுப்புறத்து தாதி, மருத்துவச்சி கைம்பெண்டு, இவர்களைக்குறித்து விவரமாய் எழுதியிருக்கிறார். எல்லா விஷயங்களிலும் கைம்பெண்டு என்பவள் நமது கிராம மருத்துவச்சியை ஒத்திருப்பாள். அவளைக்குறித்து என்ன சொல்லியிருக்கிறார் என்றால் "அவளே தாதி, அவளே நர்சி, அவளே பிணத்தைக் காப்பவள்; குழந்தை பிரசவத்தைப் பார்த்து, அதன் அழுகுரலைக்கேட்டு, அதற்கு முதல் முதல் குளிப்பாட்டி அதற்குப் போர்வையைப் போர்த்து, அதன் கடைசி பேச்சைக்கேட்டு, மரணஸ்தையின் புரட்டலைப்பார்த்து, அதன் மரண அழுகையைக்கேட்டு, கடைசியாக போர்வையைப்போர்த்து, சவத்தை, காடியால் நனைத்துத் துடைத்து, மூடி ஸ்மஸானத்திற்குக் கொண்டுபோகிறவள் இவளேயாவாள். ஜனனம், மரணம் இதில் உண்டாகும் மாறுதல்களைப்பற்றி அவள் கவலைப்படுகிறதேயில்லை."

மருத்துவ ஸ்திரீகளையும் அவர்களுடைய முறைகளையும் குறித்து எனக்கு அனுபோகம் உண்டு. சில இங்கே சொல்ல முடியாத அவ்வளவு கோரமானவை. சிசுபரிபாலன ஊழியர்கள் தற்போது மருத்துவ ஸ்திரீகளைப் பயற்சி செய்வது சரியான மார்க்கமாகும். இரண்டு வருடங்களுக்கு முன்னர் மதுரையில் 90 மருத்துவகுல ஸ்திரீகளைப் பயற்சி செய்வித்தேன். 6 மாதங்கள் பயிற்சி அடைந்த பிறகு அவர்கள் வெகுவாய் இம்முறையை சிலாகித்தார்கள். ராஜாங்கத்தாரும், லோகல் போர்டாரும் இது விஷயமாக கூடிய சீக்கிரத்தில் அக்கரை எடுத்துக் கொள்ளவேண்டும். சிசுபரிபாலன ஸ்தலங்களும் பால்தொட்டிகளும் ஏற்பாடு செய்வது நலமே. ஆகிலும் அவை தற்சாந்தியே யொழிய வியாதியை வேரோடு அறுக்க முடியாது. இதற்குத் தகுந்த சிகிச்சை யாதெனில் தேச முழுதும் மருத்துவஸ்திரீகளை பிரஸவத் தொழிலில் தேர்ச்சி யடையும்படி செய்வதேயாம். கர்ப்பிணிகளுக்கு பிரஸவ சமயத்தில் தேர்ச்சிபெற்ற மருத்துவகுல ஸ்திரீகளைப்பெற வேண்டிய வசதிகளைக் கொடுக்கவேண்டும். கர்ப்பிணிகளுக்காக வேண்டிய ஆஸ்பத்திரிகள், பிரஸவ ஆஸ்பத்திரிகள் சிசு பரிபாலன ஸ்தலங்கள் இவை இருந்தால் உப

யோகம்தான். ஆனால் பெருத்த முனிஸிபாலிடிகளில் தவிர மற்றவிடங்களில் இவைகளை ஏற்படுத்த சாத்தியப்படாது. படிப்படியாய் கிராமாந்தரங்களில் அவைகளை ஏற்படுத்த வேண்டும். இதைச்செய்வதற்குமுன், சர்க்காரும் லோகல் போர்டாரும், மருத்துவ ஸ்திரீகளை தேர்ச்சியடையச் செய்வது நல்லது. ஒவ்வொரு கிராமத்திலும் தேர்ச்சி பெற்ற மருத்துவகுல ஸ்திரீ அகப்படக் கூடியதாகவிருக்க வேண்டும். சிசுவின் தேசியப் பிரசனையைத் தீர்க்க இதுதான் முக்கியமான விஷயம்.

ஜனங்களின் ஏழ்மைத்தனம், ஊர்களின் சுகாதாரமற்ற நிலைமை இவைகளையும் கவனிக்கவேண்டிய தவசியம். இந்த பிரசனையை இராஜாங்கத்தாரும் வருமானக்காரும் கவனிக்கவேண்டியது.

### தகப்பனார்களின் கடைமை.

ஒரு கூட்டத்தில் உள்ள சிசுக்கள் விஷயமாக ஒவ்வொரு நகரத்தானுக்கும் ஒரு கடமை உண்டு. ஒவ்வொரு தகப்பனுக்கும் தன் குழந்தையின் விஷயத்தில் ஒரு கடமை யுண்டு. இந்தக்கடைமையைச் செலுத்த ஸ்திரீகளிடம் குழந்தைகளை ஒப்புவித்து விடுகிறார்கள். தகப்பன்மார்கள் தங்கள் ஆடுமாடுகள், தோட்டம் முதலியவற்றைக் கவனிப்பதில் பேர்பாதி கூட தங்கள் குழந்தைகள் விஷயத்தில் கவனிக்கிறதில்லை.

கால்நடை வைத்தியர் அல்லது விவசாயநிபுணர் ஏதாகிலும் ஒரு ஆலோசனை சொன்னால் அதைக் கவனித்து அதன்படி நடக்கிறார்கள். ஏனெனில் அதனால் பணலாபம் உண்டு. தங்கள் வயிற்றில் பிறந்த குழந்தையைக் கவனிக்காமல் அறிவற்ற ஸ்திரீகள் கையிலும் நாட்டுப்புறத்து வைத்தியர்களிடத்தும் அவர்களை ஒப்புவித்துவிடுகிறார்கள். பிள்ளைகளைக் காப்பாற்ற பணம் சம்பாதித்தால் போதும் என்று சில தகப்பன்மார்கள் நினைக்கிறார்களேயொழிய, அந்த பிள்ளைகள் நன்றாய் வளர்ந்து நன்னடத்தையுடன் இருக்கவேண்டுமே யென்று யோசிக்கிறதில்லை. அவர்களுக்கு பணம் சேகரிப்பதைவிட, அவர்களை நல்லழியில் திருப்பி நல்ல நகரத்தாராகச் செய்வதுதான் முக்கியமான கடைமை. எத்தனை சிறுவர்கள் தகப்பனார் சம்பாதித்த ஆஸ்தியை தாரைவார்த்துவிட்டு கெட்ட வழியில் பிரவேசித்து, தேகம் மெலிந்து சீக்கிரம் இறந்துபோய் விடுகிறார்கள்!

### பிறவாத சிசுவின் உரிமை.

ஒவ்வொரு குழந்தையும் சரியான நிலையில் பிறக்கவேண்டியது நியாயம். தங்கள் வம்சம் ஆரோக்கியமாகவிருக்கும்படி பார்த்துக்கொள்வது பெற்றோர் கடைமை. வைதீகர்கள், வம்சவிருத்தியை அடக்குமுறைக்காரர் ஏற்பாட்டிற்கு அவ்வளவு ஆக்ஷேபம் சொன்னபோதிலும், பிறக்கப்போகிற குழந்தை சரியான சுகாதார நிலைமையில் பிறக்க வேண்டுமென்பதை யாவரும் தடுக்கமாட்டார். இப்போது பிறந்திருக்கும் குழந்தைகள் யாவரும் சரியான சுகாதார நிலைமையில் பிறந்திருக்கிறார்களா? மனிதன் பிரஜையை உற்பத்திசெய்ய வேண்டி, தகாத நிலைமைகளில் பிள்ளைகளைப் பிறக்கும்படி செய்கிறான். உதாரணமாக, முண்டைநோயால் வருந்தும் தகப்பனுக்கும் காசநோயால் வருந்தும் தாய்க்கும் விவாகம் செய்வித்து, அவர்கள் மூலமாய்க் குழந்தை உற்பவமாவது. இது பிறக்கும்போதே ஆரோக்கியமற்ற நிலைமையிலும் சுகாதாரமற்ற நிலைமையிலும் பிறக்கிறது. இதன் உரிமையைக் கவனிக்கிறதில்லை. இது சீக்கிரம் இறந்துவிடுகிறது. அல்லது பிழைத்திருந்தால் ஜனக்கூட்டத்திற்கு ஒரு அபாயமாக ஏற்பட்டு தன்னைப்போலவே ஒரு பிரஜையை உற்பத்தி செய்கிறது. கிருமிசாஸ்திரி, காசநோய்க் கிருமியின்பேரில் குற்றஞ்சாட்டலாம். ஆனால் மானிட நன்மையைக் கவனிப்போன் ராஜாங்கத்தின்பேரிலும், ஜனசமூகத்தின்பேரிலும் குறை கூறுவான். கபடமில்லாத அநேக குழந்தைகள் இவ்வாறு பிறந்து தங்கள் பேரில், யாதொரு பிசகுமின்றி வீணாய் அவஸ்தைப்படுகிறார்கள். டஜன் கணக்



காய் இம்மாதிரி புத்திரர்களைப் பெருகிறோமே இது குற்றமென்று ஒரு தகப்பனாகிலும் எண்ணுகிறதில்லை. நம்முடைய பழக்க வழக்கங்களுக்கெல்லாம் மனுதர்ம சாஸ்திரத்தை அத்தாக்ஷியாக எடுத்துரைக்கிறோம். ஆனால் மனுதர்ம சாஸ்திரத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது. முதல்பிறந்த புத்திரன்தான் தர்மபுத்திரன். மற்றவர்கள் காமபுத்திரர்கள் என்பதேயாம். அநேக தாய்த்தந்தையர் காமத்தினால் அநேக புத்திரர்களை உற்பத்திசெய்து, தேசிய நாசத்திற்கு காரணகர்த்தர்களென்பதை தலைகுனிந்து ஒப்புக்கொள்ளவேண்டி இருக்கிறது.

### படிப்பு அவசியம்.

இப்போது நாம் சொல்லிக்கொடுக்கும் படிப்பில் தாய்தந்தையர் ஆகு முறையும் சேரவேண்டியதவசியம். தேகத்தொழிலைப்பற்றி படிப்பு அவசியம்வேண்டும். மானிடகோஷ்டி உன்னதபதவியில் இருக்கவேண்டுமென்ற ஒரு அபிப்பிராயத்தையே மனதில் நிலைநாட்டிக்கொள்ள வேண்டும். பெற்றோர் தமக்குப்பிறக்கும் பிள்ளைகள் யாவரும் தர்ம புத்திரர்களாவிருக்கவேண்டுமென்று எண்ணினால், சுகாதாரமான நிலைமைகளில் அவை பிறந்து தேசீயக்கீர்த்தியை அபிவிருத்தி செய்யும். தொத்து வியாதிகளால் வருந்தும் பெற்றோருக்கும், சுகாதாரமற்ற நிலைமைகளில் வசிக்கும் பெற்றோருக்கும், பிறந்த பிள்ளைகள் விஷயத்தில் அவர்கள் செய்யவேண்டிய கடைமை ஒன்றுண்டு. அவர்களுக்கு நல்ல நிலைமையையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கவல்லவராயிருந்தாலொழிய அவர்களை பூலோகத்தில் உற்பவிக்கச் செய்யக்கூடாது. இது விவாதமான விஷயமாயிருக்கலாம். ஆனால் கோடிக்கணக்கான பிள்ளைகள் இம்மாதிரி பிறக்கிறார்கள் என்பதைக் கவனித்து அதற்குத்தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

### முடிவு.

பிறந்ததும் பிறக்காததுமான குழந்தையின் பிரசனை முக்கியமான தேசீயப்பிரசனையாகும். இந்திய மாதா உயர்ந்தபதவியை அடையவேண்டுமானால் இப்பிரசனையை தைரியமாயும் யோக்கியமாயும் தீர்மானிக்கவேண்டும். சுயராஜ்ஜியச் சண்டையில் இதை மறந்துபோகக் கூடும். ஆனால் எனக்குத் தெரிந்தமட்டும் டாக்டர் யூ. ராமாராவ் அவர்களின் தயவினால், ஜனங்களுக்கு இப்பிரசனையைக்குறித்து ஈங்கெடுத்துக் சொல்லியிருக்கிறேன். இந்தியா மாதாவானவள் சுகாதாரமான குழந்தைகளை அடைந்து கீர்த்திமேல் கீர்த்தி அடைவாளாக.

---

## காசநோயினால் நேரிடும் பெருத்த அபாயம்.

காப்டின். ஷயம்லால் பீ. ஏ. எம். பி. ஸிவில் சர்ஜன், பாலியா.

காசநோய் இந்தியாவில் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்த வியாதி வியாபித்திராத பெருத்த நகரமாவது பட்டணமாவது இல்லை. ஆயிரக்கணக்கான ஜீவன்கள் வருஷவாரி இந்தப் பேய்க்கு இரையாகின்றனர். பர்டா, ஜனநெரிசல், சுகாதார மின்மை ஆகிய இவைகளே இவ்வியாதி பரவுவதற்கு முக்கிய காரணங்கள். பர்டாவும், காற்றோட்டம் இல்லாத வீடுகளில் அடைத்துக்கொண்டிருப்பதுமே இந்தியாவில் ஸ்திரீகளுக்கு இவ்வியாதி பரவுவதற்குக்காரணம்.

காலரா, ப்ளேக் முதலியன தொத்து வியாதிகள் பரவியிருக்கும்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாளுகின்றன.

ஆனால் காசநோயைப்போல் அவ்வளவு அபாயகரமான பலன்கள் அவற்றால் நேரிடுவதில்லை. காசநோயினால் நேரிடும் முக்கிய அபாயம் இவ்வியாதி அதிகநாள் நீடித்திருப்பதே. மேலும் இவ்வியாதி அயலார்க்கு தொத்திக்கொண்டு, பின்னால் இதன் அடிச்சுவடுகள் காணப்படும்.

இந்த வியாதி அநேக குடும்பங்களில் ஒவ்வொருவராய்ப்பிடித்து, ஒருவர்பின் ஒருவர் மாண்டுபோவதை நான் பார்த்திருக்கிறேன். இதனால் அதிகமாய் பீடிக்கப்பட்டவர்கள் ஸ்திரீகளேயாவர். ஒருவனுடைய சம்சாரம் காசநோயால் வருந்தி இறந்ததும் பிறகு அவன் விவாகம் செய்துகொண்டு, சில மாதங்களுக்கெல்லாம் அவளுக்கும் இவ்வியாதிகண்டு, அவளும் இறந்ததையும் நான் பார்த்திருக்கிறேன்.

இந்த வியாசத்தில் அடிச்சுவடிகள் விடப்படும், என்னும் அபாயத்தைக் குறித்தே இங்கு எழுதுகிறேன். இவ்வியாதி, கட்டடம், துணிகள் முதலியனவற்றில் ஒட்டிக்கொண்டிருக்கும் என்பது வாஸ்தவமே. கட்டடம், வியாதிஸ்தன் படுத்துக்கொண்டிருந்த அறை, வியாதிஸ்தன் உடுத்திக்கொண்டிருந்த உடை, படுக்கை, பாய் முதலிய யாவற்றிலுமே இவ்வியாதி ஒட்டிக்கொண்டிருக்கும்.



பசுக்கள் மூலமாய் காசநோய் பரவும். ஆனதுபற்றி பசுக்களையும், அவற்றின் பாலையும் குறித்து ஜாக்கிரதையாக விருக்கவேண்டும்.

மேற்சொல்லிய அபாயத்தினின்றும் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுவது எப்படி என்பது முக்கிய கேள்வி.

இது விஷயமாக நான் சொல்வது யாதெனில் :—

1. வியாதி கண்டிருக்கும்போது நோயாளியைப் பாதுகாப்பது முக்கியம். தனிமையாக இதற்கென்று ஒரு அறையோ, அறைகளோ ஒரு நோயாளியின் உபயோகத்திற்காக விட்டுவைக்கவேண்டும். ஆடைகள் கொஞ்சமாயும் அவன் உபயோகத்திற்காகவென்றே வைத்து வைக்கவேண்டும். வியாதிஸ்தரின் ஆடைகளை சலவைக்கு வண்ணனிடம் போடுமுன் வலுவான கார்போலிக் அல்லது லைசால் திராவகத்தில் நனைத்துவிடவேண்டும். ஆவியில் கொதிக்க



வைப்பது நலம். பாத்திரங்களை வியாதிஸ்தர் உபயோகத்திற்காகவென்றே தனியாக வைக்கவேண்டும். வியாதிஸ்தரின் அறையில் கண்டவிடத்தில் எச்சில் துப்புவதைக்கண்டித்து வலுவான விஷமாற்று மருந்து திராவகத்தை ஒரு பாத்திரத்தில் ஊற்றிவைத்து அதில் துப்பும்படி செய்யவேண்டும். வியாதியஸ்தனுடன் வேறொருவனும் அந்த அறையில் படுத்துரங்கச் செய்யக்கூடாது. வியாதிஸ்தன் இறந்தால், வியாதிஸ்தன் உபயோகித்து வந்த பாய் படுக்கை, துணி முதலியவற்றை கொளுத்திவிடவேண்டும், பாத்திரங்களை உபயோகப்படுத்துமுன்னர் நெருப்பில் போட்டுக் காய்ச்சவேண்டும். வீடு அல்லது அறையின் சுவர்களை சுறண்டிவிட்டு, விஷமாற்று மருந்தால் கழுவி, மறுபடியும் காரைபூசி, சுண்ணாம்பு வெள்ளை அடிக்கவேண்டியது. கூடுமானல் அந்த அறையையோ அறைகளையோ இரண்டு மூன்று மாதங்கள் வரையில் உபயோகப்படுத்தக்கூடாது. அறையின் கதவுகள், ஜன்னல்கள் யாவையும் திறந்துவைத்து சூரிய கிரணம் படும்படி விடவேண்டியது. முடியுமானல் மேல் கூரையையும் பிரித்து வைக்கவேண்டியது.

இந்திய குடும்பங்களில் பெரும்பாலும் இந்த ஜாக்கிறதை எடுத்துக்கொள்கிறதேயில்லை. நோயாளி கொஞ்சம் நடக்கமுடியுமானல், வீட்டிற்குள் இங்குமங்கும் நடமாடிக்கொண்டு கண்டவிடத்தில் துப்பிக்கொண்டு, எல்லா உடைகளையும் உடுத்திக்கொண்டிருக்கிறான். இதன்பலன் யாதெனில், ஒவ்வொரு வஸ்துவிலும், வீட்டில் மூலை முடுக்கு எங்கும் இந்த வியாதிக் கிருமிகள் பரவுவதே.

2. வியாதியை முன்னாடி இதுவென்று கண்டுபிடித்து, கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டவுடனே மேற்சொல்லிய விஷயங்களை அனுசரிக்கவேண்டியது.

ஆரம்பத்தில் இந்த வியாதியைக்கண்டுபிடிக்கமுடியாது. இந்தக்காலம்தான், அபாயத்திற்கு ஹேதுவான காலம். ஏனெனில், இப்போது யாதொரு எச்சரிக்கைகளையும் எடுத்துக்கொள்ளுகிறதில்லை. இந்தக்காலத்தில் வியாதியஸ்தன் அதிக அசௌக்கியமாக இருப்பதில்லை. அங்குமிங்கும் கண்டவிடத்தில் எச்சில் துப்புகிறான்.

இது விஷயமாக நான் சிபார்சு செய்வது யாதேனில் :—(a) கண்டவிடத்தில் துப்புவதைக் கண்டித்து அதை அடியோடே ஒழிக்கவேண்டும். இதற்காகவென்று தனிமையாக பாத்திரங்களை உபயோகிக்கவேண்டும். ஒரு லோட்டாவிலாவது, உடைந்த க்ளாஸ் பாத்திரத்தின் அடிப்பாகத்திலாவது,சாம்பலைப்போட்டு அதை உபயோகிக்கலாம். இது விலை சரசம். ஏழைகளுக்கும் கிடைக்கக்கூடியது.

(b) பணக்காரக் குடும்பங்களில், நோயாளியின் உடையைக்கொளுத்திவிடவேண்டும். அல்லது அவற்றை வேக வைக்கவேண்டும்.

(c) நோயாளி படுத்திருந்த அறையின் சுவர்களைச் சுறண்டியெடுத்து, மறுபடியும் காரைபூசி, வெள்ளை யடிக்கவேண்டும். கூடுமானல் இரண்டு மூன்று மாதங்கள் வரையிலும் அந்த அறையை உபயோகப்படுத்தக்கூடாது. வீடு முழுதிலும் சூரிய கிரணம்பட்டுக் கொண்டிருக்கும்படி செய்யவேண்டும். ஏழை ஜனங்கள் வீட்டில் நோயாளி உபயோகித்துவந்த உடைகளைக் கொளுத்திவிடவேண்டும். வீடு கூரையாய் இருந்தால், தரை, சுவர் இவற்றைச் சுறண்டி மறுபடியும் பூசுவது சுலபம்.

3. நோயாளியை ஆரோக்கிய ஸ்தலத்திற்காவது, ஒரு ஆஸ்பத்திரிக்காவது சிகிச்சைக்கு அனுப்புவது. நோயைத் தடுப்பதற்காகவே இதை முக்கியமாய் நான் சிபார்சு செய்கிறேன். ஒரு ஆரோக்கிய ஸ்தலத்திற்காவது, ஆஸ்பத்திரிக்காவது நோயாளியை அப்புறப்படுத்தினல், சுகாதாரமுறைகள் யாவும் அங்கே கவனிக்கப்படும். வயது முதிர்ந்த பந்துக்கள் 2, 3. பேர்கள்

அங்கே வியாதியஸ்தனுடன் இருக்கலாம். குடும்பத்தில் சேர்ந்த மற்றவர்கள் அவனிடம் நெருங்காமலிருப்பதால், இந்த வியாதி அவர்களைத் தொத்துவதற்கு ஹேதுவிராது. அவர்கள் மீந்துபோவார்கள். இந்த வியாதியின் அடிச்சுவடுகள் இருக்கும் வீட்டிலும் தொத்து சம்பந்தம் இராது.

# டைபாய்டு என்னும் விஷஜுரம் அல்லது எண்டரிக் ஜுரம்.

டாக்டர். டிரபேன்திரநாத் பானர்ஜீ, பி. ஏ. எல். எம். எப். பண்டிஹால் கிராமம், ஹௌரா ஜில்லா வங்காளம்.

இது ஒரு தொத்து சம்பந்தமான ஜுரம். வெகுநாள் வரையிலும் உஷ்ணக்கிரம் அதிகமாக இருந்துகொண்டிருக்கும். குடற் கோளாறுகளும் கூட இருந்துகொண்டிருக்கும். ஆரம்பத்தில் உஷ்ணக்கிரம் 98.4 டிக்ரீக்கு கொஞ்சம் அதிகமாகவிருக்கும். முதல் வார அந்தியத்துக்குள், 104 டிக்ரிவரைக்கும் போகும். உஷ்ணக்கிரத்தை ஜாக்கிரதையாய் கவனித்து வந்தால், சாயங்காலம் 2 டிக்ரிகள் ஏறியும், காலையில் ஒரு டிக்ரீ குறைந்தும் காணப்படும். படிப்படியாய் உஷ்ணக்கிரம் ஏறுதலும் குறைதலுமே இந்த ஜுரத்திற்கு முக்கியமான அறிகுறி. இரண்டாது வாரத்தில் உஷ்ணக்கிரம் மாறாது. ஒரே நிலையில் நிற்கும். இப்போது சிக்கு வியாதிகள் ஏற்படும். மூன்றுவது வாரத்தில், அனுகூலமான கேஸுகளில் உஷ்ணக்கிரம் படிப்படியாய் குறைந்து, அந்த வாரமுடிவில், சிக்குவியாதிகள் சம்பந்தப்படாவிடில் உஷ்ணக்கிரம் சரியான நிலைக்கு வந்துவிடும். ஆனால் அநேக கேஸுகளில் உஷ்ணக்கிரம் குறைய அநேகவாரங்கள் செல்லும்.

இந்த வியாதிக்குக்காரணம் டைபோஸஸ் என்னும் ஓர்வித விஷக்கிருமி. இது, மலம், மூத்திரம், எச்சல் முதலிய கழிவு பதார்த்தங்கள் மூலமாய் வெளித்தள்ளப்படும்.

இந்த வியாதி பரவுவதற்கு பின்வருவன முக்கியமான முகாந்தரங்களாகும் :—

(1) நோயாளியின் கழிவு பதார்த்தங்களுள் சம்பந்தப்பட்ட ஜலத்தைப் பருகுதல்.

(2) விஷ சம்பந்தப்பட்ட ஜலத்துடன் கலந்த பாலையாவது, விஷக்கிருமியைக் கொண்டுவரும் ஈக்களால் விஷப்படுத்தப்பட்ட பாலையாவது பருகுதல்.

(3) விஷ சம்பந்தப்பட்ட ஜலத்தில் பாத்திரங்களைக் கழுவுதல்.

(4) இவ்வியாதியைப் பரவச்செய்வதற்கு ஈக்கள் முக்கிய முகாந்தரமாகும்.

(5) தொண்டுசெய்வோரும், வைத்தியர்களும் இவ்வியாதியைப் பரவச் செய்யக்கூடும். ஆனால் அநேக கேஸுகளில் அவர்களுக்கு ஒரு கெடுதலும் இதனால் நேரிடுகிறதில்லை.

(6) இவ்விஷக்கிருமி இருக்கும் காற்று. இந்த வியாதிக்கு ஏற்ற மருந்து ஒன்றும் கிடையாது. சதாரணமாய், குறிகளைக் கவனித்தே இதற்கு சிகிச்சை செய்யப்படுகிறது. ஒரு இடத்தில் இந்த வியாதி கண்டிருந்தால், தடைமுறைகளை ஜாக்கிரதையாக அனுசரிக்கவேண்டும்.

தடைமுறைகள் :—

(a) குடிஜலம்—நமது தேசத்தில், அறியாமையினாலும், தனியாக அதற்கென்று ஒரு குளம் இராததினாலும், நோயாளி உபயோகித்த உடைகளையும் பாத்திரங்களையும், ஒரே குளத்தில் கழுவி அந்த ஜலத்தையே ஜனங்கள் குடித்து, அதனால் இந்த வியாதி பரவுவதற்கு ஹேதுவாகிறது. ஜனங்களின் மூடத்தன்மையை முதன்முதல் போக்கடிக்க



வேண்டும். விஷசம்பந்தப்பட்ட நீரை, விஷமாற்று மருந்துபோட்டு சுத்தப்படுத்தினாலொழிய ஜனங்கள் அதை உபயோகப்படுத்தக்கூடாதென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(b) பால்—பாலைக் கொதிக்கவைக்காமல் உபயோகப் படுத்தக்கூடாது. அதை மூடிவைக்கவேண்டும். ஈக்கள் மொய்த்து அதை தொத்து சம்பந்தப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(c) கூடுமானால், நோயாளியின் மலமூத்திரங்களைக் கொளுத்திப் போடவேண்டும். அல்லது புதைத்துவிடவேண்டும். அதனால், ஈக்கள் தொத்து வியாதிக்கிருமியை பரவச் செய்வதற்கு இடமிராது.

(d) நோயாளி உபயோகித்த உடைகளையும் பாத்திரங்களையும், வேகவைக்கவேண்டும்.

(e) ஆகாரப்பதார்த்தங்கள் யாவையும் மூடி வைக்கவேண்டும்.

(f) நோயாளி படுத்திருக்கும் அறையில் நுழைபவன், ஆகாரம் எடுத்துக் கொள்ளுமுன் தனது கைகளையும் முகத்தையும் செவ்வையாய்க் கழுவவேண்டும்.

(g) நோயாளி படுத்திருக்கும் அறையில் ஆகாரத்தையாவது பானத்தையாவது வைத்துவைக்கக் கூடாது:

(h) ஆண்டி டைபாய்டு வீரத்தினால் அம்மை குத்தித்தடுப்பதை அநேகர் சிபார்சு செய்கிறார்கள். டைபாய்டினால் வருந்தும் வியாதியஸ்தனுக்கு சம்ரக்ஷணை செய்வதுதான் முக்கியமான விஷயம். தகுந்த சம்ரக்ஷணை யில்லாமல் மருந்து மாத்திரம் ஒரு வியாதியஸ்தனை சொஸ்தப் படுத்தாது. தொண்டு செய்வோர் பின்வருமாறு வியாதியஸ்தனுக்கு சிகிச்சை செய்யவேண்டும் :—

(1) நோயாளியை மிருதுவான, சுத்தமான படுக்கையில் விட்டுவைக்க வேண்டும். தரைமட்டத்திற்கு அதிக உயரமாய் இருக்கக்கூடாது. அழுக்கடைந்து போனால், அப்போதைக்கப்போது படுக்கையின்மேல் போடும் துணிகளை மாற்றவேண்டியது.

(2) மலஜலங்களுக்கு வேண்டிய பாண்டங்களை ஸப்ளை செய்யவேண்டியது.

(3) படுக்கை அறையை காற்றோட்டமுள்ளதாயும் வெளிச்சமுள்ளதாயும் செய்ய வேண்டியது.

(4) நோயாளியின் வாயை விஷமாற்றுகளால் சுத்தப்படுத்த வேண்டியது. சாத்தியமில்லாவிட்டால் ஹைட்ரோஜன் பெராக்ஸைட் கலப்பு மருந்தில் குச்சியைத்தோய்த்து அதனால் சுத்தம்செய்ய வேண்டியது.

(5) நோயாளின் தேகத்தை வெந்நீரில் நனைத்து ப்பிழிந்த தளுவத்தால் துடைத்து சுத்தம்செய்ய வேண்டியது. அப்போது உஷ்ணக்கிரம் சமானமாயிருக்கும்படி கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைக்கவேண்டியது.

(6) உஷ்ணக்கிரம் 102°க்கு மேல் இருந்தால் தலைக்கு பனிக்கட்டி மூட்டை வைக்கவேண்டியது. பனிக்கட்டி அகப்படாத பக்ஷத்தில் குளிர்ந்த ஜலத்தில் கொஞ்சம் ஒடிக்கலோன் விட்டு ஒரு துண்டுத் துணியை நனைத்து நெற்றியில் போடவேண்டியது.

(7) சுத்த ஜலம், இளநீர், மோர் க்ளுகோஸ், ஸோடாவாடர் முதலியன நோயாளிக்குக் குடிக்கக் கொடுக்கவேண்டும். நோயாளி முழுதிலும் சொஸ்தமாகாத வரையில் [illegible] ஆகாரம் கொடுக்கக்கூடா[illegible]

JL
L மா2, N24
N31.8:6
128576
சென்னை-600 008.

# மதுபானம்.

ஆனந்த ஸ்வாமி பட்நகர், கைரானு. முஜபர்நகர்.

மஹம்மது என்னும் தீர்க்கதரிசியானவர் சொன்னதாவது "மதுபானம் செய்யாதே. எல்லாவித கெடுதலுக்கும் அது தான் ஆதிகாரணம்"

சங்கராசாரியர் சொன்னதாவது "அதைத்தொடாதே, அதை ருசி பாராதே". ஹிந்து சாஸ்திரப்படி, மதுபானம் செய்வது பஞ்சமகா பாதகங்களுள் ஒன்று.

வியாதி அல்லது நோவு இருக்கும்போது வைத்தியர் சாராயத்தை உபயோகப்படுத்தும்படி சொன்னால் அது பாதகமில்லை. ஆனால் மற்ற காலங்களில் அதை விசேஷபோகமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

ஏனெனில் எல்லா மயக்க மருந்துகளுக்கும் இந்த குணம் உண்டு. அதாவது ஒருதரம் அதை எடுத்துக்கொண்டால், மறுநாள் அதன்மேல் ஆசைபோகும். அது இராமல் இருக்கமுடியாது.

அதேமாதிரி, இரண்டாம் நாள் மூன்றும் நாள், நான்காம் நாள் சாப்பிட்டுக்கொண்டே வந்தால் அது பழக்கத்தின்கீழ் வந்துவிடுகிறது. அதை விட்டுவிட சாத்தியப்படாது.

போதை வஸ்துக்களை அனுவசியமாய் சாப்பிடுவது பிசகு. வழக்கமாய் சாப்பிட்டுக்கொண்டேவந்தால், ஒருவனுடைய தேகம், மனது, ஆரோக்கியம் யாவற்றையும் அது கெடுத்துவிடுகிறது. டாக்டர் கார்பெண்டர் என்பவர் எழுதுவதாவது: "ஒருவன் களைத்துப்போனால், சாராயத்தைப்போன்ற ஒரு உத்தீபன மருந்தைக்கொடுத்தால் சிறிதுநேரம் நரம்புகளுக்கு வலுவைக்கொடுக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்" என்பதே. இது விஷயமாக ஸ்ரிஜட் கேஷப் சந்திரஸேன் சொல்வதாவது "உத்தீபன மருந்துகளினால் தலைக்காவது கைக்காவது நூதன வலுவு ஒன்றும் உண்டாகிறதில்லை. சாராயம் ஒரு கெடுதலான வஸ்து. அது ஒரு கொடிய விஷத்தைப்போலவே வேலை செய்யும்". இதை உத்தீபன மருந்தாக எண்ணுவோர்க்கு மேற்சொல்லிய அபிப்பிராயங்களினால் அது அல்லவென்று தோன்றும்.

விடாமல் சாராயம் குடிப்பவனுக்கு பின்சொல்லிய 6 வித கெடுதல்கள் நேரிடும் ;—

1. திரவிய நஷ்டம்.

2. வழக்கு, அதனால் சண்டைசச்சரவுகள் ஏற்படும்.

3. கண்ணோய் முதலிய வியாதிகள் சம்பவித்தல்.

4. பெற்றோர், மேலதிகாரிகள் இவர்கள் நிந்தனையால் வரும் அவமானம்.

5. ஆடையின்றி அங்குமிங்கும் போவதால் ஏற்படும் மானக்கேடு.

6. பூலோக விஷயங்களைப்பற்றி பகுத்தரியும் குணம் அற்றுப்போவது.

## இந்தியாவும் மதுபானமும்.

இந்தியாவில் மதுபானம் தினே தினே விருத்தியாய்க்கொண்டு வருகிறது. 1914-ம் வருஷத்தில் 10,185,593 காலன் சாராயம் வெளிதேசங்களிலிருந்து நமது நாட்டிற்கு வந்திருக்கிறது. மொத்த இறக்குமதிகளுள் இது 100க்கு நாலில் ஒரு பங்கு ஆகிறது. சென்ற வருஷம் 56 மிலியன் காலன் சாராயம் வந்திருக்கிறது. அதன் விலை சுமார் 3½ கோடி ரூபாய். அது மொத்த இறக்குமதிகளில் 100க்கு 1½ பங்கு ஆகிறது. இப்புள்ளிகளால் மதுபானம் அதிகப்பட்டிருக்கிறதென்பது ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

இந்தியா கவர்ண்மெண்டார் குடி விஷயமாக சுங்கம் வசூலித்தல் :—குடிக்காத ஜனங்களைத் தடுப்பதும் குடிப்பவர்களை அதிகமாகக் குடிக்காமலிருக்கும்படி செய்வதும் சர்க்காரின் கொள்கை. இதை எப்படி அமுலுக்கு கொண்டுவரப்படுகிறதென்றால் சாராயத்தின்மேல் உயர்ந்த தீர்வைபோட்டு, சட்டவிரோதமாய் சாராயம் காய்ச்சவொட்டாமலும் செய்வதே.



குடிப்பதற்கு அனுகூலமாக அங்கங்கே சாராயக்கடைகள் வைத்திருப்பதும் இந்தக் கொள்கையைச் சேர்ந்ததே. கவர்ண்மெண்டார் சாராயக்கடைகளின் தொகையைக் கம்மிபடுத்தி, அப்போதைக்கப்போது அந்த அந்த இடங்களில் சென்று மேல் விசாரணை செய்து, பொதுஜன அபிப்பிராயத்திற்கு ஒத்தபடி ஜனங்களை அதிகமாகக் குடிக்கவொட்டாமல் கவர்ண்மெண்டார் செய்ய வேண்டியது.

அமிதவாதிகள் இந்தக் கொள்கையைக் கண்டனம் செயகின்றனர். கவர்ண்மெண்டாரைக் கண்டனம் செய்யவேண்டுமென்கிற ஒரு எண்ணத்தினால் இது செய்கிறதன்று இந்தக் கண்டனத்தில் உண்மையும், ஞாயமும் இருக்கிறது.

மித மதுபான சங்கத்தார் லக்ஷக்கணக்கான வருடங்கள் பிரயத்தனப் பட்டாலும் பிரயோஜனமில்லை. மதுபான விலக்குப்பிரசாரமும், உயர்ந்த தீர்வையும், மது விற்பனையை மட்டுப்படுத்தா. மதுவை ருசியில்லாமல் செய்கிறபரியந்தம் ஒருகாரியமும் நடக்காது.

சாஸ்திர உபாயங்களினாலே, மதுவிற்கு மேலும் மேலும் ருசி உண்டாக்கப்படுகிறது. கவர்ன்மெண்டாருக்கு வருமானம் வரவேண்டி, அதை நல்ல வாசனையுள்ளதாயும் தயாரிக்கப்படுகிறது. கண்டனம் செய்வோர் சொல்வதெல்லாம் வாஸ்தவமே. கவர்ன்மெண்டார், அவரது கொள்கையை இது விஷயத்தில் சரிவர நிறைவேற்றுகிறதில்லை.

ஜீ. ஜெ. எச். அபீட் எம். டி. ஸர் பால் சந்திர கிருஷ்ணு, நீலரடன் சர்க்கார் டாக்டர் தேவீந்தரநாத் மித்ரா, ஜகாரஜ்ஏன். மேடா இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு மனு செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் சாராம்சம் பின்வருமாறு :—

1. சாராயம் இன்னும் இதர போதை வஸ்துக்கள் யாவும் விஷத்தன்மை பொருந்தியன.

2. இந்தியாவைப்போன்ற உஷ்ணப் பிரதேசத்தில், தேகாரோக்கியத்திற்கு இது மிகக்கெடுதல். தேகசக்தி மனோ சக்தி இரண்டையும் அழிக்கக்கூடியது.

3. போதை வஸ்துக்களை உபயோகிப்பவர்களைக் காட்டிலும் அவற்றை உபயோகிக்காதவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் கூடியிருக்கிறார்கள்.

4. குடிக்காரன் தன்னுடைய நரம்புகளுக்கு கெடுதலையும் பலஹீனத்தையும் உண்டுபண்ணிக் கொள்வதும் தவிர, தனது வம்சத்தார்க்கே மனநோயை உண்டுபண்ணக் கூடியவன்.

5. சாராயம் குடிப்பதினாலேயே, பூலோகத்தில் துக்கமும், ஏழ்மைத்தன்மும், நோயும் பெரும்பாலும் உண்டாயிருக்கின்றன.

6. கொள்ளை நோயாகிய மஹம்மாரியை இது வரவொட்டாமல் தடுக்கிறதில்லை.

7. இதைத் தெளியச் செய்தபிறகு, ஜனங்கள் எந்தவிதமான மதுபானமும் செய்யக்கூடாதென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். மதுவிஷயமான சீர்திருத்தக்காரரும், ஜனசமூக சீர்திருத்தக்காரரும் இது விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

## சில மேலான அபிப்பிராயங்கள்

போதைக் குணமுள்ள பானங்களை விலக்கு(புத்தர்)—ஒரு குடிகாரனுடைய பணப்பை சாராயபுட்டியேயாகும் (ஒரு பழமொழி). மதுபானத்தில் இச்சை வைக்காமல் ஜாக்கிரதையாய் இரு.

மதுபானம் பண்ணால், கை நடுக்கம் கொடுக்கும். கண்ணில் தண்ணீர் வடியும், இரவில் அமைதியிராது, காம

இச்சைகள் கனவில் உண்டாகும். காலையில் வாய் நாறும், எல்லா விஷயங்களும் அடியோடே மறந்து போகும். (ப்ளிஙி.)

பங்கி யடிப்போரும் சாராயம் குடிப்போரும், யாத்திரை போனாலும் சரி, உபவாஸம் இருந்தாலும் சரி, தினம் தெய்வபூஜை செய்தாலும் சரி, அவர்கள் நரகத்திற்குத் தான் செல்வார்கள்.

வேதங்கள், கொரான் முதலிய மத விஷயமான நூல்களை யெல்லாம் ஆராயிச்சி செய்து பார். அவை யாவும் மதுபானத்தைக் கண்டிக்கின்றன. அதை விட்டால் எங்கேசென்றாலும் கௌரதை யுண்டு.

மகம்மதிய குருக்கள் மாரும், பார்ஸி ஆசான்களும், இது விஷயத்தில் ஒத்திருக்கிறார்கள். மதுபானம் பசுவைக் கொலை செய்வதைவிட அதிக பாபமுள்ளதென்று ஹிந்து வேதங்கள் முறையிடுகின்றன.

மதுபானத்தினால் உண்டாகும் கேடுகளையும், சில மேலான அபிப்பிராயங்களையும் இங்கே எடுத்துரைத்திருக்கின்றோம். உங்கள் க்ஷேமத்தை முன்னிட்டும், உங்கள் அக்கம்பக்கத்தார் க்ஷேமத்தை முன்னிட்டும் மதுபானத்தை விலக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உன்க்ஷேமத்திற்கில்லாவிட்டாலும், உன்னைச் சுற்றியுள்ள உன் அண்ணன் தம்பிகள் அக்காள் தங்கைகள் க்ஷேமத்தை முன்னிட்டாவது தயவுசெய்து மதுவை விலக்கு. இந்த விஷயத்தைப் படித்து யாராகிலும் ஒருவராவது இந்த பிரசாரத்தில் ஈடுபட்டால் இதை எழுதியவர்க்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகும். அவர் கஷ்டத்திற்குத் தகுந்த பலனாகும்.

---

# வீட்டைவிட்டு வெளியே செய்யவேண்டிய முதல் உதவி.

ஒரு தேர்ச்சிபெற்ற தாதி எழுதியது.

ஆபத்துக்கள் விடாமல் நேரிடுகின்றன. வெளியே போய்வரும் நம்மில் ஒவ்வொருவரும் முதல் உதவி புரிவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். தெருக்களில் ஆபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. லண்டன் நகரத்தில் மட்டும் தினம் 100 நபர்களுக்குறையாமல் காயம்படுகின்றனர். வண்டிகள், மோடார்கள் முதலியவற்றால் நேரிடும் ஆபத்துக்கள் தவிர, முதல் உதவி புரிவதற்கு லாயக்கான நோய்களும் ஆபத்துக்களும் கணக்கில்லாமல் இருக்கின்றன. அப்படியிருந்தும், சாக்கடைக்காலில் குப்புற விழுந்து கிடப்பவனைச் சுற்றிக்கொண்டு ஒரு வித உதவியும் புரியாமலிருப்பதுமன்றி அவன் சொஸ்தமாவதற்கு வேண்டிய அனுகூலங்கள் இருந்தால் அவற்றையும் செய்யவொட்டாமல் தடைசெய்வதற்கு அநேக ஜனங்கள் கும்பல் கூடி அவர்களைச் சுற்றிக்கொண்டிருப்பார்கள்.

## மூர்ச்சை போதல்.

ரயில்வண்டி, மோடார், அல்லது தெரு இவைகளில் ஒருவன் மூர்ச்சையடைந்து விழுந்துவிட்டால்அவரை தரையில் படுக்க வைத்து, தலைதாழமாயும் ஒரு பக்கமாக இருக்கும்படியாகவும் செய்யவேண்டியது. கழுத்துப்பட்டை, பெல்டு முதலியவற்றைத்தளர்த்து. இதனால் மூளைக்குச் செல்லும் இரத்தம் தடைபடாதிருக்கும். உத்தீபனவஸ்துக்களை ஒருபோதும் கொடாதே. எதனால் மூர்ச்சையடைந்திருக்கிறான்என்பதுஉனக்குத்தெரியாது. ஆனதுபற்றி, அதனால் நன்மையைவிட, தீமையை விளைவிக்கக்கூடும். நோயாளியின் முகம் சிவந்திருந்தால், தலையை உயர்த்தி, ஒரு பக்கமாகத்திருப்பி, போலிப்பற்கள் ஏதாகிலும் இருந்தால் அவற்றை எடுத்துவிடு. கூட்டத்தில் உனக்கு உதவிபுரிபவர் யாராகிலும் இருந்தால், அவரைவிட்டு, டாக்டர் அல்லது போலீசாருக்குத் தெரியப்படுத்தி, மற்ற ஜனங்களை வேடிக்கையாகப் பேசி, நல்லதனமாகவே அனுப்பிவிடு. எலும்பு நொருங்கிப்போதல் முதலியவற்றால் குப்புறப் படுத்திருப்பது சாத்தியமில்லாவிட்டால் நோயாளியின் தலையை முழங்காலுக்கிடையில் விட்டு, முழங்கைமுனையில், காற்று வரும்படியாய்விட்டு, மூர்ச்சை தெளிந்தவுடன், குடிக்க ஜலம்கொடு.

## வலி காணல்.

ஒருவனுக்கு வலி கண்டிருந்தால் அவன் கொடுமையுள்ளவனாகயிருப்பான். அவனைப் படுக்கவைத்து ஒரு சட்டையை அவன் தலையின்கீழ் வைத்து, தனக்குத் தானே அவன் கெடுதல் செய்துகொள்ளாதிருக்கும்படி அவனைக் கூடுமானவரையில் தடு. போலிப் பற்களை எடுத்துவிட்டு, ஒரு ரப்பர் துண்டு, கார்க்கு, பென்ஸில் இவற்றின்மேல் ஒரு கைக்குட்டையைச் சுற்றி ஆப்புமாதிரியாக, பற்களின் இடையில் வைத்து, அதை அவன் விழுங்கிவிடாதபடி பார்த்துக்கொள். கூடுமானால் தலையை ஒரு பக்கம் சாய்த்துவை. உத்தீபன வஸ்துக்களைக் கொடாதே. அவன் சொஸ்தமடைந்ததும், அவனுக்குத்தூங்க இச்சை இருக்கும். எங்கேயாகிலும் கொண்டுபோய் படுக்கவை அல்லது வீட்டுக்குக் கொண்டு படுக்கச்செய்.

## உடைந்த எலும்புகள்.

ஒருவன் கீழே விழுந்தாலும், எலும்புடைப்பு அவ்வளவாக கண்ணுக்குத் தெரியாது. நோய், வீக்கம் இருந்து அல்லது இயற்கைக்கு மாறாக வளைந்திருந்து அதனால் உடைந்திருப்பதாக சந்தேகப்பட்டால், அந்த அவயவத்தை அசைக்கக்கூடாது. ஆனால் அதை நீட்டி, அந்த இடத்தில் மேலும் கீழும் கெட்டியாக ஒரு கட்டுபோட்டு, நோயாளியை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக வேண்டியது. எலும்புடைப்பை நீ கண்டறியக்கூடாது; கையின் எந்த பாகத்திலாகிலும் எலும்புடைப்பு இருந்தால், பத்தைகளை சம்பாதிப்பதில் காலஹரணம் செய்யாதே. அந்தக்கையை மார்புக்குக் குறுக்காக கொண்டு விட்டு, உள்ளங்கை அடியிலும், விரல்கள் எதிர்ப்பக்கத்துக் கையை காட்டிக்கொண்டிருக்கும்படியாகவும், கெட்டியாகப்பொருத்தி ஆதாரம் கொடுத்தால் போதும். டாக்டர் உன்பேரில் நல்ல அபிப்பிராயப் படுவார். துண்டுத் துணிகளை முடிபோட்டு, மார்பு, கை, தோள் இவற்றைச்சுற்றி ஒரு கட்டு கட்டினால் போதும். உடைந்த காரை யெலும்பிற்கும் இம்மாதிரியாகவே சிகிச்சை செய்ய வேண்டியது.

## ஒடிந்த கால்.

ஒரு வர்த்தமானப் பத்திரிகையை கெட்டியாய் மடித்தாவது, ஒருகுடை அல்லது தடி இவற்றைக் கொண்டாவது காயம்பட்ட இடத்திற்கு இருமுனைகளிலும் மேலிருந்து கீழ்வரையில் பத்தையாக வைத்துக் கட்டவேண்டியது. காலை நழுக வொட்டாமல் பார்த்துக்கொள். எலும்பின் முனை சர்மத்தில் போய் பொத்திக் கொள்ளாமலிருக்கும்படி கெட்டியாய் நிலையில் இருக்கும்படிசெய். அப்படி செய்யாவிட்டால் கடுமையான சிக்கல் உண்டாகும். வைத்துக்கட்ட அருகில் பத்தை ஒன்றுமிராவிடில், நன்றாயிருக்கும் காலையே சேர்த்து பத்தையாக வைத்துக்கட்டலாம்.

## மூளை அமுக்கப்படுதல்; திப்பிரமையாகப் போதல்

இதில் உத்தீபன வஸ்துவைக் கொடுப்பதும் நோயாளியை அப்புறப்படுத்த முயல்வதும் கெடுதலை உண்டுபண்ணக் கூடியவை. தலைக்கு குளிர்ந்த நீரைத் தெளி. மூக்கு, காது இவைகளிலிருந்து இரத்தமாவது அல்லது ஜலமாவது கொட்டினால், மண்டையோடாவது உடைந்

திருப்பதாக அர்த்தம் பண்ணிக்கொள். இந்த சமயத்தில் நோயாளியை அசைப்பது ஆபத்துக்கிடமாகும். வண்டி ரஸ்தா அதிகமாகவிருந்தாலும் கூட, ஜனத்தை விலக்கிவிடு. தேர்ச்சிபெற்ற உதவி வரும்வரைக்கும் சாலைக்கு ஒருபுறமாக நோயாளியைக் கொண்டுபோகாதே.

மோட்டார் வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டால், ஜன்னல் கண்ணாடி கண்ணாடித்திரை இவைகளின் மூலமாய் காயம் படலாம். உடனே அழுக்கினாலும் சரி, அல்லது சுத்தமான கைக்குட்டையை மடித்து அதன்மேல் வைத்து கெட்டியாய் ஒரு கட்டு கட்டினால் இரத்தப்பெருக்கு நின்றுவிடும். பிறகு காயத்திற்கு சிகிச்சை செய்யலாம். இரத்த நாளக்குழாய்கள் தாம் சுளுவில் பழுதாகப் போகக்கூடியன. ஏனெனில் அவை சர்மத்தின் அருகாமையில் இருக்கின்றன. இரத்தம் கருப்பாக வந்து கசியும். இரத்தம் பறபறப்பாயும், பீறிக்கொண்டும் வந்தால், நாடிக்குழாய் அறந்து போனதாகத் தெரிந்து கொள்ளவேண்டும். காயத்திற்குமேல் (இருதயப் பக்கமாயுள்ள) அவயவத்தைச் சுற்றி கெட்டியாக ஒரு கட்டு கட்டி, காயத்தின் மேல், இரத்த அமுக்கை குறைப்பதற்காக ஒரு சும்மாடு வைக்கவேண்டியது. அதே காரணத்தைக்கொண்டு, அந்த அவயவத்தை உயர்த்திவை. கட்டுத்துணி சம்பாதிப்பதற்குள் சுத்தமான வெந்நீர் அல்லது குளிர்ந்த நீரில், அந்த அவயவத்தை தோய்த்து வைத்தால் நல்லது.

---

# ஆரோக்கிய வர்த்தமானங்களும் குறிப்புகளும்.

தெரியாமலே விஷப்படுதல்.—கோபம், பயம், கவலை இம்மூன்றும் நமது இரத்தத்தை விஷப்படுத்த கூடியன. கெட்ட எண்ணங்கள் விஷத்தன்மையுள்ளனவென்று அடிக்கடி சொல்லப் படுகிறது. ஏனெனில், அவை மற்ற ஜனங்களைக் கெடுக்கின்றன. ஆனால் வாஸ்தவத்தில், அவை நம்முடைய இரத்தத்தையே விஷத்தன்மையாக்குகின்றன. நம்மை நாமே, அடக்கிக்கொள்ளாமல் கோபத்திற்காளாகியும், மனக்கவலை, மனோவேஷ்டை அல்லது கெட்ட எண்ணங்கள் இவைகளில் ஈடுபட்டும், இருந்தால், தேகத்தில் ஒருவிதமான அழற்சி உண்டாகி நவீன சாஸ்திர ஆராய்ச்சிப்படி, இரத்தத்தில் விஷத்தன்மை ஏற்பட்டு அதனால் கடுமையான சம்பவங்கள் நேரிடுகின்றன.

பாம்பின் விஷம், கோபம், பயம் இவற்றால் உற்பத்தியாகின்றனவென்று இயற்கை சாஸ்திர நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அந்த விஷமானது, ஒரு தனிமையான ஒரு பையில் வந்து தங்கி, யார்மேல் கோபமோ அவர்கள்மேல் அந்த விஷத்தைக் கக்குகின்றன. இதே மாதிரியாக மானிட தேகத்திலும் நடைபெறுகின்றது. ஆனால் அந்த விஷத்தை வாங்கி வைத்துக்கொள்ள ஒரு உறுப்பும் கிடையாது. ஆனதுபற்றி அது இரத்தத்தில் பரவி பாம்புக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும் இந்த விஷம் நமக்கும் ஒரு காப்பாக இருப்பதைவிட்டு நமக்கே கெடுதலை உண்டுபண்ணுகிறது. எது எப்படி இருந்தபோதிலும், கெடுதலையான எண்ணங்கள், கோபம், பொறாமை, உஷ்ணம், அருவெறுப்பு முதலிய யாவும் மனோ நிம்மதியைப்போக்கி, விஷத்தன்மையை உண்டு பண்ணுகிறதென்பது திண்ணம்.—ஹோம் அண்டு ஹோமியோபதி.

* * *

அமெரிக்காவின் நகரங்களின் சிசு மரணவிகிதம்.—அமெரிக்கன் குழந்தை ஆரோக்கிய சங்கத்தார் பிரசுரித்த ஐக்கிய



மாகாணங்களில் 279 நகரங்களின் வருஷத்திய சிசுமரண விகித புள்ளி விவரக்கணக்குடன் கூடிய ரிபோர்டானது படிக்க ஆனந்தமாக இருக்கிறது. இந்த நகரங்களை ஜனத்தொகைப்படி 5 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. முதல் தொகுதியில் 250,000 மேற்பட்ட ஜனத்தொகை. ஐந்தாவது தொகுதியோ 10,000 முதல் 25,000 வரையில் உள்ள ஜனத்தொகை. முதல் தொகுதியில் சிசுமரண விகிதம் மிகவும் கம்மி (63.3), கடைசி தொகுதியில் மிகவதிகம் (70.4). முதல் 50,000 வரை ஜனத்தொகையுள்ள நகரங்களில் மரணவிகிதம் 66-4 இது தவிர, ஜனத்தொகை ஏற ஏற மரண விகிதம் குறைய ஆரம்பிக்கிறது. 10 நகரங்களில் 30க்கும் கம்மி. 38 நகரங்களில் 110க்குமேல் போகிறது. 485-ல் 50 முதல் 90 வரையில் இருக்கிறது. பாஸிபக் சமுத்திரகரையோரமாகவிருப்பதில் அதிக அனுகூலம். அதிக பிரதிகூலமானவை, தெற்கேயுள்ள நகரங்கள். நிக்ரோக்களிடம் சிசு மரணவிகிதம் அதிகம். ஆனதுபற்றி வெள்ளையர்களும் நிக்ரோக்களும் எந்த விகிதாசாரம் கலந்திருக்கிறார்களோ அதன்படி மொத்த மரண விகிதம் ஜாஸ்தியோ கம்மியோ இருக்கிறது. பொதுவாய் மரண விகிதம் கம்மியாகவே யிருக்கிறது. ஆனால் பெருத்த கைத்தொழில் நகரங்களில் மிக கம்மியாகவே யிருக்கிறது. இது ஒரு பெருத்த விசேஷம். ஏனெனில் "குழந்தை ஆரோக்கிய சங்கத்தார் பிரசாரத் தொழிலை ஆரம்பிக்கும் போது மரணவிகிதம் அதிகமாகவே இருந்தது. குழந்தை பரிபாலனத்தார் விமரிசையாக வேலை செய்துவரும் பக்ஷத்தில் சிசுமரணவிகிதம் சராசரி 50-ல் வந்திறங்கும்—அதற்கு கீழ்ப் போவது கடினம். அப்படி ஏதாகிலும் நேர்ந்தாலும் ஏதோ ஒரு சமயம் நேரலாம். இந்த மரணவிகிதத்தின் ஐந்தில் நான்குபங்கு கர்ப்பிணியாயிருக்கும்போதும், பிரசவித்தபிறகும் உண்டாவது. மீதி ஒரு பங்கு தொத்து வியாதிகளால் நேரிடுவது. முற்காலத்தில் மகா கொடூரமான ஜீரணக் கோளாறுகள் எந்த தேசத்திலும் எந்த சந்தர்ப்பங்களிலும் வெகுவாய்த் தடுக்கக்கூடியனவே. அறியாமையினால் உண்டாகும் சிசு மரணம் இப்போது ஒழிந்துபோய் விட்டது. இப்போது வைத்தியர்களின் அறியாமையினாற்றான் இது நேரிடுகிறதென்று சொல்லவேண்டும். ஆனது பற்றி இந்தப் பிரசனை இப்பொழுது மாறிவிட்டது. இது வரையில் தெரிந்ததை புத்திசாலித்தனமாய் உபயோகப்படுத்தச்சொல்லியிருந்தது. இனிமேல் அதிக ஞானம் சம்பாதித்து அதை உபயோகிக்க வேண்டும்.—மெடிகல் ஆபீஸர்.

* * *

மூன்றுவித பள்ளிக்கூடத்து டாக்டர்கள்.—நியூ, ஜெர்ஸி மெடிகல் சொஸய்டி ஜர்னலில் ஸ்டான்லி நிகலஸ் எம். டி., என்பவர் சொல்லியிருக்கிறார். முதலாவது, ஸ்கூல் வைத்தியத்திற்கு மலிவாய் கண்டிராக்டு செய்துகொண்டு எப்படியாகிலும் அந்த வேலையை சம்பாதித்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு வந்து உபாத்தியாயருக்கு ஒரு சலாம்போட்டு, பிள்ளைகளைப்பார்த்து "பிள்ளைகளே! க்ஷேமமா! என்று கேட்க அவர்கள் "க்ஷேமந்தான்' என்று சொல்ல" உடனே, டொப்பியை போட்டுக்கொண்டு வீட்டுக்குப்போய் சம்பளத்தை வாங்கிக் கொண்டு சுகமாய் காலம் தள்ளும் டாக்டர்கள். இவர்களை இப்போது அதிகமாய்க் காண்கிறதில்லை. இவர்களும், மலிவாய் டாக்டர்களை நியமிக்கும் ஸ்கூல் போர்டாரும் சீக்கிரத்தில் ஒழிவார்களாக! இரண்டாவது, கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு, ஸ்டேட் போர்டார் செய்துள்ள வித்தியா விதிப்படி எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவுமட்டும் செய்பவர். இவர்களுக்கு பள்ளிக்கூடத்து ஆரோக்கியம் என்றால் ஒன்றும் தெரியாது. அதைத் தெரிந்துகொள்ள இவர்கள் சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறதும் இல்லை. கடைசியாக, பள்ளிக்கூடத்து வைத்தி

யத் தொழிலில் அதிக சிரமம் எடுத்துக் கொண்டு அவர்களுடைய அறிவுக்கும் சக்திக்கும் எட்டினமட்டும் தங்கள் வேலையைக் கவனமாய்ச் செய்பவர்கள். இவ்வினத்தார் விருத்தியாகக் கடவர்!

* * *

ஒரு சுல்தானின் ஆகாரம்:—1135 கி. மு. முதல் 1204 கி.மு. வரையில் எகிப்து தேசத்தில் வசித்திருந்த ராபி மோஸஸ் பென்மைமான் என்னும் ஜியூ வைத்தியர் ஒருவர் சுல்தானுக்காக சில ஆகார விதிகளை எழுதியுள்ளார். அவை பின் வருமாறு:—

(1) உனக்குப் பசியாயிருக்கும்போது உண்டு, பானம் அருந்து. கால்வாசி பசியைத் தணிக்காமல் விட்டுவிடு.

(2) தகரத்தில்போட்டு அடைத்து வைத்த மீன், மாமிசம், பாற்கட்டி, எதெது கெட்டவாசனை வருகிறதோ அதையெல்லாம் தவிர்.

(3) 8 மணிநேரம் தூங்கினால் போதும். ஆனால் விடியற் காலத்தில் எழுந்திருப்பது நலம்.

(4) சாப்பிட்டானவுடனே படுக்கப் போகாதே.

(5) தேக சௌக்கியத்துக்கு தேகாப்பியாஸம் முக்கியம்.

(6) போஷணை குணமுள்ள ஆகாரத்தைத் தேடவேண்டும். உனக்குப் பிரியம், அப்பிரயம் என்பதை கவனிக்கக்கூடாது.

(7) சங்கீதம், நல்ல படங்கள், தோட்டங்களில் உலாவுதல் இவை துக்கத்தில் மூழ்கியிருப்பவர்களுக்கு நல்லது—ஜே. எம். எஸ். என். ஜே.

* * * *

சௌகரியம் அதிகமாயுள்ள காலம்.—இந்தக்காலமானது சௌகரியங்கள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய காலம். உனக்கு வேண்டிய ஆகாரங்கள் யாவும் தகரத்தில் அடைத்து வருகிறது. ரேடியோவில், உபதேசங்களைக் கேட்கிறோம். குழந்தை வேண்டுமானால், தகப்பனில்லாத பிள்ளைகளைப் பெருவதற்கென்று வைத்திருக்கும் ஆஸ்பத்திரிகளில் அநேகம் இருக்கின்றன.—ஓஹியோ ஸ்டேட் ஜர்னல்.

* * *

சிகிரேட் பிடிப்பதினால் உண்டாகும் அதிகசிலவு.—இது வரையில் சிகிரெட் பிடிப்பது ஆண் மக்களேயாவர். இப்போது பெண்களும் பிடிக்க ஆரம்பித்து விட்டனர். இதைத்குறித்து இங்கு சற்று யோசிப்போம். இந்த வருஷம் வியாபாரம் கெட்டுப்போயிருந்தாலும்கூட, சிகிரெட் விற்பனை, சென்ற வருஷத்தைவிட அதிகமாக விற்குமென்று ஐக்கிய மாகாணத்தைச்சேர்ந்த வியாபார இலாகாவின் பிரிவாகிய புகையிலைப் பிரிவின் முக்கிய ஆபீஸர் அக்டோபர் 14உ விளம்பரப் படுத்தியிருக்கிறார்.

சென்ற வருஷம் 119,000,000 சிகிரெட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டன. அதாவது, தலைக்கு ஆயிரம் ஆகிறது. மற்ற வியாபாரம் கெட்டுப்போயிருந்தாலுங்கூட, சிகரெட் பிடிப்பது விடாமல் நடந்துக்கொண்டிருப்பதால், இந்த வியாபாரமட்டும் எப்போதும் கெடாதென்று ஏற்படுகிறது. இந்த வருஷம் உபயோகப்படுத்தப்பட்ட 119,000,000 சிகரெட்டின்விலை சொல்லப்படவில்லை. ஆனால் தேகத்தை மினுக்கு செய்வதற்கு வருஷவாரி சிலவு செய்யப்படும் ஒரு பில்லியன் டாலர்களுக்கு இது சமானமாகவிருக்குமென்றே நிச்சயமாய் ஏற்படுகிறது.—காலிபோர்னியா அண்டு வெஸ்டர்ன் மெடிஸன்.





## பிரஸவ காலத்தில் செய்யவேண்டிய முதல் உதவி.

நூலாசிரியர்—டாக்டர் யூ. ராம ராவ்.

நமது இந்து தேசத்தில் தாய்களின் மரண விகிதமும் சிசுக்களின் மரண விகிதமும் தற்போது அதிகமாகவிருக்கிறது. ஒரு வயதுக்குட்பட்ட சிசுக்களில் 1000க்கு 260 பேர்கள் வருஷவாரி மாண்டு போகிறார்கள். தாய்மார்கள் கர்ப்பிணிகளாகவிருக்கும்போது ஆரோக்கிய விதிகளைக் கவனியாமல் தேகத்தை பலஹீனப் படுத்திக்கொள்வதும், பிரஸவ காலத்தில் டாக்டர், தேர்ச்சி பெற்ற மருத்துவ ஸ்திரீ இவர்கள் உதவி இல்லாமல், புராதன பழக்கத்தைக் கைப்பிடித்து ஒன்றும் தெரியாத மருத்துவகுல ஸ்திரீகளைக் கொண்டு மருத்துவம் செய்து கொள்வதும், சிசு பிறந்த பிறகு அதற்கு வேண்டிய போஷிப்பைச் சரிவர செய்யமாலிருப்பதுமே இதற்கு முக்கிய காரணங்களாகவிருக்கின்றன. ஆனதுபற்றி இந்திய ஸ்திரீகளுக்கு பிரஸவத்தைக் குறித்து அற்ப ஞானமாகிலும் இருக்கவேண்டியது அவசியமாகவிருக்கிறது. முதல் உதவி புரியப் போதுமான அறிவு இல்லாமையால் அநேக கெடுதிகள் சம்பவிக்கின்றன. பிரஸவ வேதனைப்படும்போது டாக்டர் அல்லது மருத்துவ ஸ்திரீ வரும் வரையில் இன்னது செய்யவேண்டுமென்பதை மட்டும் இச் சிறு நூல் கற்பிக்கிறது. இதில் பதினொன்கு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. கர்ப்பச் சின்னங்கள், கர்ப்ப காலத்தில் நேரிடும் விபத்துக்கள், சுகப்பிரவசம், கஷ்டப் பிரவசம், பிரசவத்தில் பரிசுத்தம், பிரசவ காலத்தில் நேரிடக்கூடிய சிக்கான வியாதிகள், குழந்தையின் பாதுகாப்பு, சிசுக்களின் போஷிப்பு இவை முதலியன யாவரும் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள். இப்புத்தகம் எளிய தமிழ் நடையில் பரிபாஷைக் கலப்பின்றி எழுதப் பட்டிருக்கிறது. விலை அணா 6.

ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். வி. பி. யில், அனுப்பவேண்டுமானால் ஆறு காப்பிக்கு குறையாமல் ஆர்டர் செய்யவேண்டும். வேண்டுவோர் சென்னை தம்பு செட்டித் தெரு 323 நெ. ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். விலாசம்—ஆரோக்கிய தீபிகை மானேஜர் தாபார்பெட்டி 166, சென்னை என்று எழுதவும்.



சஸ்திர சிகிச்சைக்கு அவசியமில்லை

### அல்ஸரைன் (ரெஜிஸ்டர்ட்.)

ஸிவில் சர்ஜன் டாக்டர் எ. என். ஸேன், எம். பி. எழுதுவதாவது :—ஆழமான சஸ்திர ரணங்களையும் கட்டு இல்லாமல் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தி விடுகிறது. விஷ சம்பந்தம் ஏற்பட்டு விடுமென்ற பயத்திற்கு இடமில்லை.

கண் கோளாறுகள்.

நமது தேங்காய் மார்க்கு தாமரைத் தேனானது கண்களில் ஏற்படும் எல்லாக்கோளாறுகளையும் சஸ்திர சிகிச்சையின்றி குணப்படுத்தி விடுகிறது. இயற்கை ஔஷதம். டிராம் 1-க்கு ரூ. 2-8-0. 2 டிராம் ரூ. 4. தபாற் செலவு வேறு. பெங்கால் கண்டியிலிருக்கும் நியூ பார்முலா கம்பெனிக்காவது, ஏஜெண்டுகளான தாதா கம்பெனி, 52, நயினியப்ப நாயக்கன் தெரு, சென்னை; கெம்ப் அண்டு கம்பெனி, கெமிஸ்டுகள், பம்பாய்; ஜே. நீரத் அண்டு கம்பெனி, கெமிஸ்டுகள், கராச்சி இவர்களுக்காவது விபரங்களுக்கு எழுதுங்கள்.

தபால் சார்ஜ் பிரத்யேகம்.

*Ask free particulars from :—*

**New Formula Co., Kandi, Bengal.**

***Agents*** **:—Sri Krishnan Bros., P. O. Box 166 Madras, Dadha & Co., 52 Nayniappa Naick St., Madras.**



**ROWJEE'S**

## EAR DROPS.

## காதிற்குத் தைலம்.

காது, மூக்கு, தொண்டை முதலிய இடங்களில் காணும் வியாதிகளை குணப்படுத்துவதில் பெயர்போன ஒரு வைத்திய நிபுணர் குறிப்பிட்ட முறைப் படி இது தயார் செய்யப்பட்டது. காதுகளிலிருந்து சீழ்வடிதல் முதலியவைகளை இது உடனே நிறுத்திவிடும் காதுகளுக்குள்ளிருக்கும் புண்களை ஆற்றி, வலியை நிறுத்தும், சிறியோர், பெரியோர் அனைவரும் இதை உபயோகிக்கலாம். காலை மாலை இருவேளையும் 5 பொட்டு மருந்தைக் காதுகளில் விட்டுக்கொள்ள வேண்டும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ்,

தபாற் பெட்டி, 166, சென்னை





# சுவாஸகாசநிவாரணி

**ROWJEE'S**


ராவுஜீயின் பரம **ASTHMA SPECIFIC** ஔஷதம்.

உபயோகித்ததும் குணம் தெரியக்கூடியது.

சுவாஸகாச நோயினால், பீடிக்கப்பட்டிருப்பவர்களுடைய உபாதையானது இந்த ஔஷதத்தை உபயோகித்த உத்தர க்ஷணத்திலேயேகுறைய ஆரம்பிக்கிறதென்று அனுபவத்தில் தெரிந்திருக்கிறது. ஒருதடவை ஔஷதத்தை உபயோகித்ததும் பிணியாளியின் சொல்லொணாத் துன்பமும், தூக்கமின்மையும் இதர உபாதைகளும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடுகின்றன. இந்த ஔஷதத்தின் பக்குவ முறையைப் புட்டியின் மீதே நாம் குறிப்பிட்டிருப்பதால் எல்லா வைத்தியர்களும் இதைச் சிபார்சு செய்கிறார்கள்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2—8—0

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ்,



**323,** தம்புசெட்டித் தெரு, சென்னை.



தமிழ் மொழி வளர்ச்சிக்குழைக்கும்

## " தனவணிகன் "

கோட்டையூர்.

செட்டிமார் நாட்டிலுள்ள 78 ஊர்களிலும், மற்றும் செட்டிமார்கள் வியாபாரம் செய்யும் பர்மா, சிலோன், மலாய், கொச்சின் சைனா, லண்டன் முதலிய இடங்களிலும் " தனவணிகன் " பத்திரிகை இரண்டாயிரம் பிரதிகட்கதிகமாய் உலாவுகின்றது.

தனவணிக நாட்டிலுள்ள எல்லாக் கட்சியாராலும், தமிழ் நாட்டிலுள்ள எல்லாப் பத்திரிகைகளாலும் பாராட்டப்படும் பத்திரிகை 'தனவணிகன்' ஒன்றே.

பெரும்புகழ் படைத்த தனவணிகசமூகத்தின் ஒரே பத்திரிகையாய் உள்ளதும் தமிழ் நாட்டிலுள்ள சிறந்த எழுத்தாளர்களால் வரையப் பெற்ற அரிய கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டுவிளங்குவதும் 'தனவணிகன்' பத்திரிகை ஒன்றுதான்.

பிரதி இங்கிலீஷ் மாதம் 15தேதியிலும் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் 60 பக்கத்துடனும், ஆப்டோன் படங்களுடனும், சித்திர பிளாக்குகளுடனும் கண்கவர் வனப்புடன் 'தனவணிகன்' வெளிவருகின்றான்.

| | |
|---|---|
| வருடச்சாந்தா. உள்நாடு | இரண்டு ரூபாய், |
| வெளிநாடு | இரண்டரை ரூபாய். |

மானேஜர்.

தனவணிகன் கம்பெனி லிமிடெட்,

கோட்டையூர்.

# விபத்துகள்.



அகஸ்மாத்தாகக் காயமடைந்து விடுகிறவர்களுடைய கதியானது, அவரை முதலில் கவனிப்பவர்களுடைய யோக்யதையைப் பொறுத்திருக்கிறது. பிரதம சிகிச்சை செய்யத் தெரிந்தவர்கள் அருகாமையிலிராததால் காப்பாற்றி விடக்கூடிய ஆயிரக்கணக்கான உயிர்கள் வருஷந்தோறும் அநியாயமாய்ப்போய் விடுகின்றன. பிரதம சிகிச்சை என்றால் என்ன? அகஸ்மாத்தாக ஏற்பட்டுவிடும் காயங்களுக்கும், திடீரென்று காணும் வியாதிகளுக்கும், சிகிச்சை செய்வதுதான் பிரதம சிகிச்சை. டாக்டர் வரும்வரையில் காத்திராமல், உடனே சிகிச்சைசெய்வதற்கு அவர்கள் பயிற்சி பெற்றிருக்கவேண்டும் "அரைப் படிப்பு ஆபத்து" என்று ஒரு வசனம் சொல்வதுண்டு. ஆனால், எல்லா விதிகளுக்கும் விலக்கு உண்டு. பிரதம சிகிச்சை விஷயத்தில் அந்த விலக்கை உபயோகித்துக்கொள்ள வேண்டும். அற்ப ஞானத்தைக் கொண்டும் பெருத்த அபாயங்களிலிருந்து உயிர்களைக் காப்பாற்றலாம். காயம்பட்டு ரத்தம் வடிந்தாலும், தீப்பிடித்து விட்டாலும், நரம்புகள் முறிந்துவிட்டாலும், ஜலத்தில் விழுந்து விட்டால் சாகும் தருவாயிருந்தாலும் அந்த சமயத்தில் சிகிச்சை செய்யத் தெரியாமலிருப்பதுதான் அபாயகரமானதாகும். டாக்டர் வரும் வரையில் காத்திருந்ததில் ஆயிரக்கணக்கான உயிர்கள் அநியாயமாகப் போயிருக்கின்றன. பிரதம சிகிச்சை முறை தெரிந்திருந்ததால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. கஷ்டப்படும் சகோதரர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்கிற ஜீவகாருண்ய புத்தி அநேகமாக எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால், என்ன செய்வதென்று தெரிகிறதில்லை. இந்த சந்தர்ப்பங்களில் என்ன செய்வதென்று தெரிய வேண்டுமானால் டாக்டர் பூ. ராம ராவ் எழுதியுள்ள "பிரதம சிகிச்சை" என்னும் புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். இங்கிலீஷ், "தமிழ்," "தெலுங்கு, "கன்னடம்," மலையாளம் இந்த பாஷைகளில் புத்தகங்கள் கிடைக்கும்.

## பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

இந்தியன் ஸோஷல் ரிபார்மர்:—"அகஸ்மாத்தாய் நேர்ந்த விபத்தால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் ஒருவரை நேரில் பார்த்தும் உதவி செய்யமுடியாமல் போகவேண்டி யிருப்பவர்களுக்கு இதுபரம உபகாரமாக இருக்கும்."

மெட்ராஸ் மெயில்:—மிகவும் உபயோகமான பிரசுரம். அழகாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது

ஸிவில் அண்ட் மிலிட்டரி கெஜட்:—"நடை தெளிவாகவும், எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய விதமாகவும் இருக்கிறது."

டாக்டர் பிச்சு அய்யர், பிரதம சிகிச்சை போதகாசிரியர், கோயமுத்தூர் வனகலாசாலை:—"ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இந்தப் புத்தகமிருக்கவேண்டும்."

லெப்டினண்ட் கர்னல் கிரர்கஸ், ஐ. எம். எஸ். டி., பம்பாய் செயிண்ட் ஜார்ஜு ஆம்புலன்ஸ் படையின் காரியதரிசியும், டிவிஷனல் சூப்பரிண்டெண்டெண்டும்:—"இது ஒரு நல்ல புத்தகம்; பிரதம சிகிச்சை வகுப்பு மாணக்கர்களுக்கு அதிக உபயோகமாக இருக்கும்."

### பிரதம சிகிச்சை உபகரணங்கள்.

எப்பொழுதும் உங்களுடைய கையில் இருக்கவேண்டும்.

நமது செட்டில் அவசியமான எல்லா வஸ்துக்களும் இருக்கும். சட்டைப்பையில் போட்டுக்கொண்டு போய்விடலாம். அதை உபயோகிக்கும் விவரங்கள் அடங்கிய அறிக்கை கூட அனுப்பப்படும். ஒரு செட் விலை ரூ. 2.

பாடசாலைகள், ஆபீஸ்கள், தொழிற்சாலைகள் முதலியவைகளுக்கும் கிடைக்கும். விலை விவரத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஒரு பிரதி விலை அணா 12.

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ், தபாற்பெட்டி நம்பர் 166, சென்னை.

## ஆரோக்கியப் படத்திரட்டு.

தொகுதி 2, 1930.

சரீராரோக்கிய சம்பந்தமான விசித்திரப்படங்கள் பல இதில் அடங்கியுள்ளன. காற்று, ஜலம், ஆகாரம், குழந்தைப் பருவம், தாய்ப்பருவம், தூசு, வியாதி, பிரதம சிகித்ஸை, சரீரப் பயிற்சி, ரோக சிகித்ஸை, முதலியவைகளைப் பற்றிய விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிப்போல் திருஷ்டி பூர்வமாகவே ஒவ்வொரு புருஷனும், ஸ்திரீயும், மாணவன் மாணவியும் கண்டறிந்து, நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் அடைந்து ஆனந்தப்படக்கூடியது. ஒவ்வொரு வீட்டிலும், பாடசாலையிலும், புத்தகசாலையிலும் பொதுப் புத்தகசாலையிலும் வைக்கத் தகுந்தது. தேகம் வியாதியால் மெலிந்து மனம் நொந்து கிடக்கும் சமயத்தில் நல்ல துணைக்கும் சிநேகிதனுக்கும் ஒப்பாக இருக்கக் கூடியது. எவனொருவன் திடகாத்திர சரீரத்துடன் ஆரோக்கியமும் தீர்க்காயுளும் அடைய விரும்புவானோ, அவனுக்கு கிளர்ச்சியையும், உற்சாகத்தையும், உபதேசத்தையும் தரக்கூடியது. இது பெருமைக்கு வாங்கி வைக்க வேண்டிய புத்தகமன்று. இது ஒவ்வொரு வீட்டிலும், சங்கத்திலும், கிளப்பிலும், பாடசாலையிலும், புத்தக சாலையிலும் அத்தியாவசியமாக இருக்க வேண்டிய புத்தகம்.

முதல் தொகுதி சீக்கிரம் செலவாகி விட்டபடியால், அநேகர் ஏமாந்து போனார்கள். இன்றே ஆர்டர் செய்யுங்கள். விலை ரூ. 1, முன்பணமாக அனுப்பவேண்டியது. ஆரோக்கிய தீபிகையின் சந்தாதாரர்களுக்கு அணா 12, முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

உடனே அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிக் கொள்ளவும்.

மனேஜர்,
"ஆரோக்கிய தீபிகை"
323, தம்பு செட்டித் தெரு, சென்னை

## நல்ல பற்கள் நல்ல ஆரோக்கியத்தை நிச்சயமாய்த் தரத் தகுந்தன

நம்முடைய விஷ சம்பந்த மற்றதும், வலுவு கொடுக்கக் கூடியதுமான பற்பொடியை உபயோகித்தால் பற்கள் நன்றாயிருக்கும். விஷ சம்பந்தமற்றதும் வலுவைக் கொடுக்கக் கூடியதுமான அநேக மூலிகைகள் கலந்தது. பற்களுக்கு பலம் கொடுக்கக்கூடியது. பற்களை முத்துப்போல் வெளேரென்று செய்யக்கூடியது.

ஒரு டின் விலை அணா 12
3 டின் விலை ரூ. 2-0-0.
பல் பிரஷ் விலை அணா 14

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ்
தபாற்பெட்டி 166, மதராஸ்



# குழந்தைப் பருவத்தில் ஆகாரக் கோளாறுகள்.



கீழ்ப்பிரதேசத்தில் சிசுமரண விகிதம் அதிகமென்பது எல்லாடாக்டர்களுக்கும் தெரிந்த விஷயமே. சிசுவின் ஆகாரத்தில், தாய்ப்பாலுக்குப் பதிலாகத்தேடும் ஆகாரத்தில் அஜாக்கிரதையாக விருப்பதே இதற்கு மூலகாரண மென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இரத்தத்தில் சுலுவில் உறிஞ்சப்படும்படியானதும், அதிக போஷணகுணமுள்ளதும், வாய்க்கு ருசிகரமாயிருக்கும்படியானதுமான ஆகாரம் முக்கியமாகத் தேவை. ஐம்பது வருடகாலங்களாக ஹார்லிக்ஸ் தான் ஏற்ற குழைந்தை ஆகாரமாகுமென்று வைத்தியர்கள் யாவரும் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

சுத்தமான பாலேடு நிரைந்த பசும்பாலில், போஷண சக்தியுள்ள மால்டெட் பார்லியும் கோதுமையும் கலந்து, ஒரு தனிமுறையினால், ஆவியாகமாற்றி அதை உலர்த்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஹார்லிக்ஸுக்கு போஷணையுள்ள ஆகாரப் பானத்தின் குணம் இதனால் தான் ஏற்பட்டிருக்கிறது.



ஹார்லிக்ஸ் என்பது சரியான சமஎடையுள்ள ஆகாரம். ஜீவஸத்துப் பொருள்கள் நிறைந்தது. இதில், லாக்டோஸ் மால்டோஸ், டெக்ஸ்டிரின் முதலிய மிஸ்ரம கார்போஹைட்ரேட்டுகள் அடங்கியுள்ளன.

128576

[illegible]ர்களுக்கு மருந்து எழுதிக்கொடுக்கும் பொழுது [illegible]ஹார்லிக்ஸை நிச்சயமாய்க் குறித்து வையுங்கள்.

## ஹார்லிக்ஸ்




[illegible] பால், எங்கும் கிடைக்கக்கூடியது.

Printed at the People's Printing & Publishing House, Ltd., & Published by the Proprietor
Dr. U. RAMA RAU, MADRAS.

# வைரக்கற்கள்.

## சில பிரமுகர்களுடைய அபிப்பிராயம்.

**ஸ்ரீமான் கே. பி வேலாயுதமேனன் எழுதுவதாவது.**—ஸுராஜுமால் லல்லுபாய் கம்பெனியார் ஒரு ஜோடிக் கம்மல்களுக்காக எனக்கு வைரக் கற்கள் சப்ளைசெய்தனர். அவர்களையே நல்ல கற்களாகப் பொறுக்கி வி. பி. யில் அனுப்பி வைக்கும்படி எழுதியிருந்தேன். நல்ல கற்களைப்பொறுக்கி எடுத்தனுப்பி எனக்குத் திருப்தியாக நடந்து கொண்டனர். மார்க்கெட்டு விலையைவிடக்குறைவாகவும், நல்ல சரக்காகவும் இருந்தது.

**ஸ்ரீமான் ஏ. ஜானகிராம் செட்டியார் எழுதுவதாவது:**—நீங்கள் அனுப்பிய தோட்டில் பதித்திருந்த கற்களின் குணத்தையும் கட்டடத்தின் பேன்மையையும் என்னுடைய வீட்டுக்காரர்கள் பாராட்டுகிறார்கள். ஈஸ்டர் விடுமுறை காலத்தில் சென்னைக்கு வர உத்தேசித்திருக்கிறேன். உங்களுடைய வியாபார ஸ்தலத்திற்கு வந்து சம்பா சரங்களுக்கு வைரக்கற்களைப்பொறுக்கி எடுத்துக் கொள்ளுகிறேன். தங்களுடைய கம்பெனியைப்பற்றி இங்குள்ளவர்களுக்கு சிபார்சு செய்கிறேன்.

**ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், எம். எல். ஏ., எழுதுவதாவது:**—உங்களிடம் வாங்கிய வைரத்தோடானது எனக்குத் திருப்தியைக்கொடுத்திருக்கிறது. கல் பரீக்ஷைக்காரர்கள் கற்கள் உத்தமமானவையென்றும், தோஷமற்றவையென்றும் சொல்லுகிறார்கள். ஒரே விலை வைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இதனால்தான் வாங்கும் சரக்கு இன்னதென்று வாங்குவோருக்குத் தெரிந்துவிடும். இந்தவழக்கத்தையும், உங்களுடைய கௌரவத்தையும் காப்பாற்றிக்கொண்டு வாருங்கள்.

**ஸ்ரீமான் யூ. எஸ். ராமசுந்தரம் எழுதுவதாவது:**—நீங்கள் அனுப்பிய நகையில் பதித்திருந்த கற்களின் விசேஷத்தையும், கட்டடத்தின் அழகையும் எல்லோரும் பாராட்டுகிறார்கள். அந்தப் பெருமை உங்களுடையதுதான். முதன் முதலாக இப்பொழுதுதான் நான் வைர நகை வாங்குகிறேன். அதை உங்களிடத்திலிருந்து வாங்கியதற்கு நான் சந்தோஷப்படுகிறேன். அதிகமாக வைரநகைகளை வாங்க வேண்டுமென்றும், அவைகளை உங்களிடமே வாங்கவேண்டுமென்றும் விரும்புகிறேன்.

அடியிற்கண்ட விலாஸத்தில் முதல் தரமான வைரக்கற்கள் கிடைக்கும்.

## சுராஜ்மல் லல்லுபாய் கம்பெனி,

135, பெரிய கடைத் தெரு, திருச்சினாப்பள்ளி,
113, ஆதியப்ப நாயக்கன் தெரு, சென்னை.

கிரேட் பிரட்டனில்

சென்ற வருஷத்தில் 3000 ஆஸ்பத்திரிகளில்

40,000,000 பேர்களுக்கு **விரால்** கொடுக்கப்பட்டிருக்கிறது.

துர்ப்பலமடைந்து வருவோர்க்கும், பல ஹீனமான குழந்தைகளுக்கும், கர்ப்பஸ்திரீகளுக்கும், பிரஸவித்த ஸ்திரீகளுக்கும் இது முக்கிய ஆகாரப் பதார்த்தமாக உபயோகப் படுத்தப் படுகிறதென்பதை வைத்தியர்கள் பெருவாரியாக இந்த உபயோகிப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இதில் எல்லாவித ஜீவஸத்துப் பொருள்களும் சேர்ந்திருப்பதாலும், சரக்குகளின் சேர்க்கை ஒழுங்காகச் செய்யப்பட்டிருப்பதனாலும் ஆகாரத்தை உட்கொள்ளாமல் கஷ்டப்படுத்தும் குழந்தைகளுக்கும், மற்றோருக்கும் இது நலல பலனைத் [illegible] இருக்கிறது.

உங்களுடைய குழந்தை நன்றாக வளர்ந்து வராவிடில் டாக்டர்களைப்போல் அதற்கு விராலைக் கொடுங்கள்.

# VIROL

18 விரால் லிமிட்டெட், ஹான்கர் லேன், ஈலிங், இங்கிலாந்து.

கொசுக்கள்—மூட்டைப்பூச்சிகள்—ஈக்கள் எறும்புகள்.

இவைகள் உங்களுடைய ஆரோக்கியத்தைக் கெடுக்கின்றன

# லோடல்

என்னும் சுத்தமான மருந்தைத் தெளித்து இவைகளை உங்கள் வீடுகளினின்றும் துரத்திவிடுங்கள்.

**லோடல்** எல்லாவிதப் பூச்சிகளையும் கொன்றுவிடுவதுடன் அவைகளின் முட்டைகளையும் நாசமாக்கி விடுகிறது. இதன் மெல்லிய துளிகள் எல்லா மூலைமுடுக்குகளுக்கும் சென்று பூச்சிகளை வெளிவரச் செய்து அவைகளின் உயிரைப் போக்கடிக்கின்றது. **லோடல்** சீக்கிரம் காற்றில் உலர்ந்து விடுவதால் எவ்வித மறுவையும் உண்டாக்குவதில்லை. எங்கும்விற்பனை செய்யப்படுகின்றது.

தென்னிந்தியாவிற்கு பிரத்தியேக ஏஜெண்டுகள்:—

**டி. எ. டேலர் அண்டு கம்பெனி,**
**10/14 அர்மனேக்காரத் தெரு, மதராஸ்.**

58